Reg. M. 2330

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955
MADRAS

உ

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு

மலர் 26 | விஜய ஆவணி 1953 ஆகஸ்டு | இதழ் 8

நாட்டு ஒலி

1. நாட்டில் குழப்ப நிலை: நம் நாட்டிற்குத் தன்னுரிமை ஏற்பட்டு ஐந்துஆண்டுகளுக்குமேல் ஆயின. ஆனால் எதிர்பார்த்தபடி பொன் கால நிலை ஏற்படவில்லை. நாட்டில் எங்கு பார்த்தாலும் எதனை எடுத்தாலும் குழப்ப மயமே தோன்றுகிறது. அமைதி என்பதே கிடையாது. வெளி நாடுகளில் குழப்பம், உள் நாடுகளில் குழப்பம், அரசியல் துறை வாணிபத்துறை, கைத்தொழில் துறை, சமயத்துறை முதலியனவைகள் எல்லாவற்றிலும் குழப்பமே. படைச்செலவு குறைக்கப்படும் என்பது போய் ஏறிக் கொண்டிருக்கின்றது. வெளிநாடுகள் அதிகாரமும் பெருமையும் விழைந்து போராடும் காலத்தில், நம்நாடோ அடக்கமும் போதும் என்ற நிலைமையும் தன்கோட்பாடாக அமைத்துக் கொண்டு ஏனைய நாடுகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்கும் என்று நம்பப்பட்டது. ஆனால் அதற்கு மாருகப் பிற நாடுகளின் சச்சரவுகளுள் நம்நாடும் பிணைபட்டுக் கணக்கற்ற அரசியல் தூதுவர்களை வெளி நாடுகளுக்கு அனுப்பி விவகாரங்களை ஆதரித்து வருகின்றது. உள் நாட்டிலும் வடகோட்டுப் பகுதி ஒன்றைச் சேர்த்து அமைக்கக் குரங்குப்பிடிகொண்டகொள்கையோடு ஏனைய மக்களின் அரியபொருள்களை இழக்கச் செய்கின்றது. இக்கோட்பாட்டினால் பொதுமக்களுக்கு அமைதியின்மையே யன்றி அமைதியில் ஒரு கூறும் ஏற்படவில்லை.

இந்த வகையில் நாடெங்கும் குழப்பமேயிருந்தால் மக்கள் முன்னேற்றம் அடைவது எப்படியோ?

2 கல்வியிலும் குழப்பம்: பொது அரசியல் இந்தப் பரிதாபமான நிலையில் இருக்கத் தென்னாட்டு அரசியல் மிக வும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்று கூறவும் வேண்டுமா? பாரதத் தலை நகரில் ஏற்பட்டுக் கொண்டு வரும் செய்திகள் நமக்கு அவ்வளவாக எட்டுவதில்லை. ஆனால் நம் கண் எதிரே தென்னாட்டில் தோன்றும் செய்திகளோ தமிழ் மக்களின் கண்களை உறுத்திக் கொண்டிருக்கின்றன. அண்மையிலே இருபெரும் கேள்விகள் தோன்றியிருக் கின்றன.

1. மொழிவாரி நாட்டுப்பிரிவினை, 2. புதுக் கல்வித் திட்டம். இவைகளில் மொழிவாரிப் பிரிவினை, அமைதியாய் இருந்த மக்களின் உணர்ச்சிகளை எழுப்பிப் பொறாமை விளை விக்கின்றது. இதனால் ஏற்படக் கூடிய தீயசெயல்களை அளவிடமுடியாது. சங்கநூலாரின்,

"உளநாள் சிலவால் உயிர்க்கு ஏமம்இன்றால்
பலர்மன்னும் தூற்றும் பழியால்—பலருள்ளும்
கண்டாரோடு எல்லாம் நகாஅது எவன்ஒருவன்
தண்டித் தனிப்பகை கோள்"

என்ற வெண்பாவில் கண்டபடி உணர்த்தப்பட்ட அறிஞவ யார் போற்றுகிறார்கள்? இக்கொள்கையை வளர்த்தாது நிறுத்திவிட்டு மற்றொரு கேள்வியாகியகல்வித் திட்டத்தைப் பற்றிச் சில சொற்கள் கூறுவோம்.

உலகம் முழுவதிலும், முற்போக்கு அடைந்த நாடுகள் முழுவதிலும், மக்களின் பெரும்பான்மையோர் எழுத்து வாசனை பெற்றவர்களாயிருக்கிறார்கள். ஆங்கிலர் முதலிய வெள்ளைக்காரர்கள் கூடியமட்டில் எல்லாரும் படித்திருக்க, கீழ் அடைந்திருந்த துருக்கியும், ஜப்பானும் அவர்களைப் போலவே வெகுவிரைவில் படிப்பு நிலைமை அடைந்துவிட் டன. ஆனால் பண்டைய பண்பாடுடையவர்கள் என்று பெருமையோடு பேசிக்கொண்டிருக்கும் நாமோ நம்மிற் பெரும்பாலார்க்கு எழுத்து வாசனையும் காண்பிக்கவில்லை. சிறு பகுதியினரைத் தவிரப் பெரும்பாலாரை வள்ளுவர் மொழியில் மாக்கள் என்றே கூறவேண்டும். அப்படி

யிருக்கத் தன்னுரிமை வந்தவுடன் ஒவ்வொரு மகனுக்கும் மகளுக்கும் படிப்பைக் கற்றுத் தருவோம் என்று பெருமை பேசிய தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள்? யாராவது கேள்வி கேட்டுவிட்டால் நம்மைவிட்டுச் சென்ற ஆங்கில ஆட்சியின்மீது பழிபோடுகிறார்கள். துருக்கியில் புது ஆட்சி வந்தவுடன் ஐந்து ஆண்டு அளவில் பாதிப்பேர் கற்றவர்கள் ஆய்விட்டார்களாம். நம் நாட்டின் கணக்கைக் கேட்கவே வேண்டாம். இன்றைக்கும் நூற்றுக்கு 80 பேருக்குமேல் படியாதவர்களே. இதைக் கண்டு அமைச்சர் குழாங்கள் திரைப்படம் காட்டுதல்போல் புதுப்புதுத் திட்டங்களை வகுத்துக் காண்பிக்கிறார்கள். வெற்றிவருமா என்று எவரும் சிந்திப்பதில்லை. இந்தத் திட்டங்கள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே அமைச்சு மாறி வேறு திட்டம் வருகின்றது. இதனால் குழப்பம் ஏற்படுகின்றதே ஒழிய அமைதியில்லை.

3. புதுக் கல்வித் திட்டம்: தேசீயக் கட்சியார் ஆட்சிக்கு வந்தவுடன் தொழிலைப் பின்பற்றிய கல்வித் திட்டமே சிறந்ததென்று எங்கும் வெளிப்படையாகச் சொன்னார்கள். அதற்காகக் கணக்கற்ற பயிற்சிச் சாலைகளை ஏற்படுத்திப் பெரும்பொருள் செலவழித்தார்கள். ஆனால் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டு தாங்கள் கற்பித்த பள்ளிகளில் நடைமுறையில் புகுத்தினார்களா என்பது கேள்வி. அந்தத் திட்டத்தினால் மக்கள் ஏதுகாறும் பயன் அடைந்தார்கள் என்பது தெரியவில்லை. அவ்வாறு ஒரு திட்டம் முடிவடையாத நிலைமையில் இருக்கையிலேயே தற்போது மற்றொரு திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த இரண்டாவது திட்டம் மக்களிடை மாறுபாடான எண்ணங்களைக் கிளப்பிக் கொண்டு வருகிறது.

நாட்டில் எத்தனை முயற்சி செய்தும் போதுமான பிள்ளைகள் பள்ளிகளுக்கு வருவதில்லை. அதற்குக் காரணம் மக்களுடைய எதிர்ப்பு அல்ல, ஆசிரியர்களுடைய பாராமுகமல்ல, பொதுமக்களுடைய வறுமையும் ஆசிரியர்களுடைய 'வறுமையுமே' காரணமாகும். நாட்டுப்புறங்களில் தொழிலாளிகள் பொதுவாக ஏழைகள். அவர்கள் குழந்தைகளின் ஒத்தாசை தங்கள் தொழிலுக்கு மிகவும்

வேண்டும். பிழைப்புத் தொழிலில் உதவி செய்பவர்களைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டால் இந்த ஏழை மக்கள் பிழைப்ப தெப்படி? ஆகவே பிள்ளைகளைப் பள்ளியில் அனுப்ப மறுக்கிருர்கள். இதற்குக் காரணம் வறுமையே. இனி ஆசிரியர்களுக்கோ ஊதியம்மிகக் குறைவு. அரைவயிற்றுக் கஞ்சிக்கு நாள் முழுதும் பாடுபடவேண்டும். இந்த நிலைமையில் அரசியலார் என்ன செய்வதென்று திண்டாடுகிருர்கள். பணம் செலவாகப்படாது. பிள்ளைகளும் அதிகரிக்கவேண்டும். ஆகவே புதுத்திட்டத்தில் மூன்று மணிநேரம் படிப்பும், மூன்று மணி நேரம் பெற்ருேர் தொழிலும் பிள்ளைகள் செய்தால் படிப்பு இரட்டிப்பு ஆகுமென்பதே புது திட்டத்தின் கருத்து ஆகும். இதைப்பற்றி ஏற்பட்டுள்ள கிளர்ச்சியைக் கூறுவோம்.

4. திட்டத்தில் ஒரு வேறுபாடு: தற்போது முதலமைச்சர் கொண்டுவந்திருக்கும் புதுத்திட்டத்தில் ஒரு வேறுபாடு புகுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டம் முதல்முதலில் நாட்டுப் புறங்களில் சிறு கிராமங்களில் ஏற்படுத்தப்படுமாம். அதில் வெற்றியைக் கண்டபிறகுதான் நகரங்களுக்குக் கொண்டுபோகப்படும். ஆகவே தொடக்கத்தில் நாட்டுப்புறங்களுக்கும் நகரப்புறங்களுக்கும் ஒருவேற்றுமை காணப்படும். நாட்டுப்புற மக்கள் நாள் ஒன்றுக்கு 3 மணி நேரம் எழுத்தறிவும், மற்ற நேரங்களில் தொழிலும் செய்துகொண்டிருக்க அவர்களுடைய படிப்பு நிதானமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட பிள்ளைகள் நகரப்புறத்துப் பள்ளிகளில் சேர்ந்து அவர்களோடு சமமாகப் படிப்பதென்ருல் எளிதல்ல. தற்போது இந்த வேற்றுமை இல்லை. பெரிய அரசியல் பகுதிகளில் நாட்டுப்புறத்து மக்களே தெரிந்தெடுக்கப்படுவதும் பதவி வகிப்பதும் நேரில் காணும் காட்சி. புதுதிட்டத்தில் இது ஏற்படுமா? ஆனுலும் நாட்டுப்புறங்களில் புதுதிட்டம் எளிதாக நிறைவேறக் கூடும். ஒவ்வொரு குடும்பமும் பண்ணைத் தொழில்களில் ஈடுபட்டிருப்பதால் பிள்ளைகளும் பெற்ருேர்களுடைய தொழில்களில் ஈடுபடுவது சுலபம். ஆகவே புதுதிட்டத்தை நாட்டுப்புறங்களில் செலுத்துவது சுலபமாகும்.

நகரப்புறங்களில் இதே திட்டத்தைப் பின்னுலே கொண்டுவரக் கூடுமென்று கல்வி அமைச்சர் கோவையிலே

கூறினர். அந்த முயற்சி வெற்றியாகுமா என்பது ஒரு கேள்வி. நாட்டுப்புறங்களில் இருப்பதைப் போல நகரப் புறங்களில் தொழில்முறை இல்லை. அலுவல் அகங்களில் வேலை செய்யும் பெற்றோர்களின் குழந்தைகள் எந்தத் தொழிலைச் செய்யக்கூடும். ஆகவே 3 மணிநேரம் வேலை செய்யும் ஒரு பிள்ளை மற்றப்பொழுதெல்லாம் விளையாடல் களில் கழிப்பான். அதேமுறை தற்போது (Shift System) மாற்றுமுறை நடைபெறும் நகரசபைப் பாடசாலைகளில் காண்கிறோம். ஆகவே இந்த முறை நகரங்களுக்குச் சரி யானதா என்று ஆராயவேண்டும்.

மேலும் இப்புதுதிட்டத்தில் சமயப் படிப்புக்கு இடமே இல்லை. ஏற்கெனவே நமது பிள்ளைகள் சமயப்படிப்பு இல் லாமல் சீர்கெட்டு வருகிறார்கள். தற்கால நாகரிகத்தில் உல்லாச வசீகரங்கள் தலைவிரித்து ஆடும்போது சமயப் படிப்புப் போன்ற ஒரு படிப்பு இல்லாவிட்டால் சிறுவர் களின் போக்கு என்ன ஆகுமோ?

5. பிரசாரங்கள்: புதுக்கல்வித்திட்டம் அமைச்ச ரால் வெளியிடப்பட்டதும் நாட்டுப்புறங்களில் நடை முறைக்குக் கொண்டுவரத் தொடங்கிவிட்டார்கள். அதைக் கண்டபிறகுதான் பொதுமக்களும், செய்தித்தாள்களும் விழித்துக் கொண்டன. பல கூட்டங்களில் ஆசிரியர்களும், பொதுமக்களும் பேசி எதிர்க்கத் தொடங்கினார்கள். சில அரசியல்வாதிகள் இதனையே வியாஜமாக வைத்துக் கொண்டு அரசியல் மறியல் செய்யத் தொடங்கிவிட்டார் கள். நாட்டில் எங்கு பார்த்தாலும் குழப்பம் அதிகமாகி விட்டது.

வெறுங் கல்வித் துறையில் ஏற்பட்ட ஒரு திருத் தத்தை மிகப்பெரிதாக்கி அரசியல் துறைக்கேள்வியாக மாற்றி நாட்டில் பிரசாரம் செய்வது ஒருக்காலும் ஒத்துக் கொள்ளத் தக்கதல்ல. என்றாலும் எதிர்ப் பிரசாரங்கள் தொடர்ந்து நடந்து வருவதைக் கண்டு அரசியலாரும் தங்கள் சார்பிலே பிரசாரங்கள் செய்யத் தொடங்கி விட் டார்கள். இதற்கென ஒரு தனி அலுவலாளரை ஏற் படுத்தி நாடு முழுவதும் பிரசாரம் செய்து வரும்படி ஏவி யிருக்கிறார்கள். அவரும் ஒவ்வொரு வட்டத்திற்கும் சென்று ஆசிரியர் குழுக்கள், பொதுமக்கட் கூட்டங்கள்

முதலானவைகளில் பிரசாரம் செய்துவருகின்றூர். இவ்விதமாகச் செய்யும், பிரசார, எதிர்ப் பிரசாரங்கள் அமைதியைத் தராது என்று அறியவேண்டும். இருதரத்தாரையும் கூட்டிவைத்து ஏற்றுக்கொள்ளக்கூடிய பகுதிகளை ஏற்றுக்கொண்டு இறுதித் திட்டமாக வைப்பதே நல்ல முறையாகும்.

6. ஒரு சிறந்த கட்டுரை : கல்வித்துறையில் சிறந்த அனுபவம் பெற்ற பெரியார் திருப்பராய்த்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனத்துச்சுவாமிகளாகிய சித்பவானந்தரவர்கள். அவர்கள் வெளியிடும் தர்மசக்கரம் என்னும் மாசிகையில் "கல்வித்துறையில் குழப்பம்" என்ற பகுதியில் ஒரு அரிய கட்டுரை வெளியிட்டிருக்கின்றூர். அக்கட்டுரையைப் பொது மக்களும் கல்வி அதிகாரிகளும் படித்து ஆராய வேண்டியது அவசியம். நமது நாட்டுமக்களைப் பண்டைய முறையில் கொண்டுசெல்வதே சரி என்று நிரூபிக்கின்றூர். அரசியல் துறையில் மாறுபாடு அடைகிற அமைச்சர் குழாங்கள் இதில் புகுந்து தங்கள் இச்சைப்படி மாற்றுவது சரியல்ல என்று கண்டிக்கின்றூர். நாட்டினுடைய பண்பாட்டை ஒட்டி இளைஞர்களுக்குக் கல்வி கற்பிப்பதே சாலச்சிறந்ததென்று வற்புறுத்தியிருக்கின்றூர். தம் கருத்துக்களுக்கு ஏற்ற எடுத்துக் காட்டுக்களை இடையிடையே தந்து விளக்கியிருக்கின்றூர். அனுபவம் பெற்ற இப்பெரியாரின் கருத்துக்களுக்கு அதிகார வர்க்கத்தார்கள் மதிப்புக் கொடுப்பார்களாக !

7. அடிப்படைக் காரணம் யாது ? இந்த நாட்டில் ஆங்கிலர்கள் கால்வைத்த நாள் முதற்கொண்டு பலதிட்டங்களை ஏற்படுத்தியதில் கல்வித் திட்டமும் ஒன்றூகும். அந்தத் திட்டத்தை வைத்துக் கொண்டே நமது அமைச்சர்களும் மேற்கொண்டு கட்டத் தொடங்குகிறூர்கள். ஆனல் ஆங்கிலர்கள் நோக்கம் வேறு, நம்முடைய நோக்கம் வேறு. ஆங்கிலர்களோ தமது அரசியலை வலுவுப்படுத்தும் எண்ணத்துடன் நாட்டு மக்களுக்கு கணக்கப் பிள்ளைப் படிப்பு மட்டும் கற்றுக் கொடுத்தார்கள். அதற்கு வேண்டிய உபகரணங்கள் வரவு செலவுத் திட்டங்கள் மட்டுமே புகுத்தினூர்கள். ஆகவே படிப்புக்கு என்று செலவு செய்தது

மிகக் குறைந்த தொகையாக இருந்தது. செலவு வகையில் இன்னும் மாறுபாடு அடையவில்லை.

தன்னரசு வந்தபிறகு படிப்பின் நோக்கம் வேறு என்று தற்போது அரசியல் தீர்மானித்திருக்கிறது. மக்களைப் பண்பாடு உள்ளவர்களாக்கி நாட்டில் ஒருவர்கூட அறியாதவர் இல்லை என்று சொல்லும் வண்ணம் திட்டம் வகுக்கவேண்டும் என்பது தற்காலக் கொள்கை. எப்பொழுது கொள்கை மாறுபாடு அடைந்ததோ அப்பொழுதே வரவு செலவும் மாறுபாடு அடையவேண்டாமா? அதுதான் நடைபெறவில்லை. முந்தியிருந்த விகிதாசாரச் செலவினுல் எவ்வாறு கல்வி முன்னேற்றம் அடைய முடியும்?

சென்னைப் பல்கலைக் கழகத்துத் துணை வேந்தர் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியபோது நமது நாட்டில் கல்வி முன்னேற்றமடையாததற்குக் காரணம் பொருளின்மைதான் என்று நன்கு கூறியிருக்கின்ருர். இத்தகைய கருத்துக்கள் வெளிவந்திருந்தும் பணச்செலவுகள் அதே நிலையிலிருக்கக் கல்விமட்டும் பரவட்டும் என்ருல் எவ்வாறு பரப்ப முடியும்? ஆகவே கல்வி அபிவிர்த்திக்குப் பொருளே அடிப்படைக் காரணம் என்க.

8. மற்ருெரு காரணம்: புலவர் வறுமை என்பது நமது நாட்டில் ஒரு பழமொழியே ஆகிவிட்டது. அதனைப் பள்ளியாசிரியர் வறுமையென்று மாற்றி எழுதினுலும் அது ஒக்கும். பள்ளியாசிரியரின் வறுமை நிலையைப் பற்றிப் பொதுமக்களேயன்றி அரசியலாரும் அறிவர். அதனை ஒழிப்பதற்காக ஒரு நூற்ருண்டாக முயற்சிகள் எடுத்துக்கொண்டும் வறுமை ஒரு சிறிதளவேனும் குறைந்தபாடில்லை. படித்த ஆசிரியனுக்கும் படியாத தொழிலாளிக்கும் உள்ள வாழ்க்கை வேற்றுமை யாவரும் அறிந்ததே. சென்ற பெரும் போருக்குப் பிறகு இந்த வேற்றுமை விரிந்து காண்கிறது. படித்த ஆசிரியனுக்கு அரைவயிற்றுக்கும் கஞ்சி கிடைப்பதில்லை. ஆனுல் தொழிலாளிக்கோ அவனுடைய ஒற்றுமை உணர்ச்சியினுல் நிலைமை பெருகி வருகின்றது. இந்த வேற்றுமை அறிந்த பள்ளியாசிரியன் எவ்வாறு பொறுத்திருப்பான். படியாத தொழிலாளி கூட்டங்களில் தைரியமாக எதிர்த்துப் பேசுகின்ருன். படித்த

ஆசிரியன் கூட்டங்களில் பேச அஞ்சுகிறுன். அரசியலார் களோ உன்னுடைய கடமையைச் செய், ஊதியத்தைப் பற்றி நினைக்காதே என்கிறுர்கள். இந்த உபதேசம் தற் கால வாழ்க்கைப் போராட்டத்தில் செல்லுமா?

போதாக் குறைக்குப் புதுதிட்டத்தில் 5-மணி வேலைக்கு மாருக 6-மணி வேலை செய்ய வேண்டுமாம். ஊதிய உயர் வைப்பற்றிப் பேச்சேயில்லை. அதிகாரிகளைக் கேட்டால் பின்ருல் யோசிக்கப்படும் என்கிறுர்கள். இந்த நிலையில் எந்தத் திட்டம்தான் முன்னேறும். ஆசிரியர் வறுமை நீக்கு வதற்குப் போதுமான பொருட் செலவுதான் வேண்டும்.

9. பிறநாடுகள்: முன்னமே கூறியபடி பிறநாடு களில் தொடக்கப்படிப்பு சீர்பெற்று இருக்கிறதல்லவா? மேல் நாடுகளைப் போல கீழ் நாடுகளில் துருக்கியும், ஜப் பானும் கல்வியில் முன்னேற்ற மடைந்திருக்கிறது. வெகு விரைவில் அவைகள் எவ்வாறு வெற்றியடைந்தன என் பதை நமது நாட்டு அரசியல் கவனித்ததா? ஜப்பானியரும் துருக்கியரும் தொடக்கக் கல்வியைக் கட்டாயப் படுத்தினர். பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்பாத பெற்ருேர் களைத் தண்டித்தனர். முதியோர்களுக்கும் அவ்விதமாகவே விதிகள் இயற்றப்பட்டன. பொதுமக்களும் நாடு மேன்மை அடைய வேண்டுமென்ற ஊக்கத்தில் இருந்தனர். ஆகவே படிப்பு முன்னேற்றம் அடைந்தது.

10. கட்டாயப் படிப்பு: கட்டாயப் படிப்பு என்ற ஒரு திட்டம் 30-ஆண்டுகளுக்கு முந்தியே சட்டத்தில் சேர்க் கப்பட்டது. ஆனுல் நடைமுறையில் அது பலிக்கவில்லை. வெறும் பேச்சளவில் கட்டாயம் என்ற சொல் இருக்கிறதே தவிர, பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பாவிட்டால் ஏன் என்று கேட்பார் இல்லை. தொடக்கப்படிப்பு ஆறு வயது முதல் 11-வயது வரையில்தான். இந்தக் காலம் பிள்ளை கள் விளையாடும் காலமே தவிர, ஒரு தொழிலில் ஈடுபடும் காலம் அல்ல. ஆகவே, எளிதில் படிப்பைக் கட்டாயமாக்க முடியும். தற்போது சொல்லும் சாக்கு என்னவென்ருல் பிள்ளை பெற்ருேர்க்கு உதவி புரிகிறுன் என்பதுதான். நன்ருய் ஊன்றிப்பார்க்கும்போது 10-வயது ஆன சிறு வன் தான் பெற்ருேர் தொழிலுக்குப் போகக் கூடும். மற்ற

4-ஆண்டுகளும் பிள்ளைகள் பள்ளிக்குச் செல்லக் கட்டாயப் படுத்துதல் ஏன் கூடாதோ ?

இனி முதியோர் கல்வித்திட்டம் என்று சொல்லிக் கணக் கற்ற பொருளைச் செலவழிக்கிறார்கள். இத்திட்டத்தில் சென்ற ஆண்டில் எவ்வளவு பலன் கிடைத்த தென்று உண்மை கூறுவார்களா ? கோடைக்கால வகுப்பு என்று சொல்லி ஒவ்வொரு நிலையத்திலும், ஆயிரக்கணக் கில் செலவழிக்கிறார்கள். இதில் எவ்வளவுபேர் உண்மை யில் படிப்பு பெற்றார்களென்று நேரில் கண்டவர்களுக்கே தெரியும். இந்த மேல் பூச்சுச் செயல்களினால் நாடு முன் னேற்றம் அடையாது, பொதுமக்களும் ஏமாற மாட் டார்கள்.

11. நாட்டிற்கு வேண்டிய படிப்பு: கட்டாயப் படிப்பைப் புகுத்த வேண்டுமென்றால் துருக்கி செய்த வழியைப் பின்பற்ற வேண்டும். எந்த நிலையமோ, எந்தத் தொழிற்சாலையோ, எந்த நகர சபையோ, எந்த கிராம சபையோ, எந்த வியாபார ஸ்தலமோ, எது வாகிலும் சரி, தொடக்கப் பாடசாலையில் படித்துத் தேர்ந்த உறுதிப் பத்திரத்தைக் கொண்டுவந்தாலன்றிச் சேர்த்துக் கொள்ள முடியாது என்ற விதி ஏற்படுத்த வேண்டும். மேலும் முதியவர்களிலும்கூட படிப்பற்றவர்கள் ஓரிரண் டாண்டில் அந்த உத்திரவாதப் பத்திரத்தைக் கொண்டு வந் தால் ஒழிய வேலையில்லை யென்று கூறவேண்டும். இப்படிப் பட்ட கட்டாயங்களினால் எளிதில் செயல்களை நிறைவேற் றிக்கொள்ளலாம். கட்டாயம் இல்லாமலிருந்தால் எந்த நாட்டிலும் படிப்பு ஏறப்போகிறதில்லை.

மற்றொரு முதன்மையான கேள்வி யிருக்கின்றது. வெறும் லௌகீகப் படிப்பில் நாடு முன்னேறாது. பிள்ளை கள் ஒழுக்கத்தில் இருக்க வேண்டுமென்றால் சமயப்படிப்பே சிறந்தது. நமது அரசியல் அதனை வேண்டாமென்கிறது. சமயப் படிப்பைத் தனியாக விட்டுவிடும் பக்ஷத்தில் வெறும் படிப்பு மக்களைப் படுகுழியில் ஆழ்த்திவிடும். சமயப் படிப் புக்கு இடமில்லாத திட்டம் யாதொரு பயனும் தராது. ஆகவே புது திட்டத்தில் சமயப் படிப்புக்குத் தகுந்த இடம் கொடுத்துக் கட்டாய முறையை நடைமுறையில் கொண்டு வந்தால் ஒழிய நாட்டிற்கு ஈடேற்றம் இல்லை.

2. தலப்பகுதி

திருக்கூடலையாற்றூர்

1. இடம்: இது நடு நாட்டில் உள்ள ஒரு பாடல் பெற்ற ஸ்தலம். சிதம்பரத்திலிருந்து நேர் மேற்கே 12-கல்லில் உள்ளது. ஸ்ரீ முஷ்ணத்திலிருந்து கிழக்கே 3-கல்லில் இருக்கிறது. இந்த ஸ்தலத்தில் நடு நாட்டின் தெற்கெல்லையாக ஓடுகிற வெள்ளாறு என்கிற நிவா நதியும், விருத்தாசலத்திற்கு அருகே ஓடுகிற திருமணி முத்தாறும் கூடுகின்றன. இதனாலேதான் இந்த ஊருக்குக் கூடல், ஐயாற்றூர் என்று பெயர்.

2. கோயில்: பழைய கோயில். செல்லும் வழி சரியாக இல்லாததினால் மக்கள் கூட்டம் குறைவு. சுந்தரமூர்த்தி சுவாமிகளே இவ்வழியிலே போகும்போது இடம் தெரியாமல் போகையில் இறைவனால் ஏவப்பட்டு இந்தத் தலத்தை அடைந்தார் என்றால் இக்காலத்தில் மக்கள் செல்வது கடினம் அல்லவா?

3. மூர்த்திகள்: சுவாமியின் பெயர் நெறிகாட்டு நாயகர் - தேவியின பெயர் புரிகுழல் நாயகி.

4. தீர்த்தம்: வெள்ளாறும், மணிமுத்தாறும் கூடுகிற கூடல் துறை.

5. ஐதீகம்: சுந்தர மூர்த்திகள் திருமுதுகுன்றம் என்ற விருத்தாசலம் சென்றுகொண்டிருந்தார். வழியிலே இந்த ஸ்தலம் இருந்ததை எவரும் அறிவிக்கவில்லை. சுவாமிகள் இந்த ஸ்தலத்திற்குப் போகாமல் நேராகப் போய்க்கொண்டிருந்ததைக் கண்ட இறைவன் ஓர் அந்தணவடிவம் கொண்டு முன் சென்றுகொண்டிருந்தார். அவரைக் கண்ட சுந்தர மூர்த்திகள் "சுவாமி, திருமுதுகுன்றத்துக்கு வழி எது" என்று வினவினார். அதற்கு அந்த அந்தணர் "கூடலையாற்றுக்குப் போகும் வழி இது" என்று ஒரு வழியைக் காட்டிவிட்டு மறைந்தருளினார். சுந்தரமூர்த்திகளோ இது இறைவன் திருவருளின் ஆணை என்று வியந்து இந்தத் தலத்திற்குச் சென்றருளினார். அங்கே இறைவனுடைய செயலை வியந்து "வடிவுடை மழுவேந்தி" என்ற

திருப்பதிகத்தைப் பாடியருளினார். வழிகாட்டியதனாலே இறைவனுக்கு "நெறிகாட்டும் நாயகர்" என்ற பெயர் ஏற்பட்டது.

6. பாடல் : சுந்தரமூர்த்திகள் பதிகத்தில் ஒவ்வொரு அடியிலும் இறுதி அடியில் "அடிகள் இவ்வழிப் போந்த அதிசயம் அறியேனே" என்ற கருத்துப்படப் பாடியிருக்கின்றார்.

மேலே கூறிய ஐதீகத்தைச் சேக்கிழார் சுவாமிகள் திருதொண்டர் புராணத்தில் ஏயர்கோன்கலிக்காம நாயனார் புராணத்தில் அடியில் கண்டபடி கூறியிருக்கின்றார்.

"செப்பரும் பதியில் சேரார் திருமுது குன்றை நோக்கி
ஒப்பரும் புகழார் சொல்லும் ஒருவழி உமையா ளோடு
மெய்ப்பரம் பொருளாய் உள்ளார் வேதியராகி நின்றார்
முப்புரி நூலுந் தாங்கி நம்பியா ரூரர் முன்பு"

"நின்றவர் தம்மை நோக்கி நெகிழ்ந்த சிந்தையராய்த் தாழ்வார்
'இன்றியாம் முதுகுன்றெய்த வழி எமக்கியம்பும்' என்னக்
குன்றவில் லாளியாரும் 'கூடலை யாற்றூர் ஏறச்,
சென்றதிவ் வழிதான்' என்று செல்வழித் துணையாய்ச்செல்ல."

"கண்டவர் கைகள் கூப்பித் தொழுதுபின் தொடர்வார் காணார்.
வண்டமர் கொன்றை யாரை 'வடிவுடை மழு' என்றேத்தி
அண்டர் தம் பெருமான் போந்த அதிசயம் அறியேம் என்று,
கொண்டெழும் விருப்பினோடுங் கூடலையாற்றூர் புக்கார்."

சங்கற்ப நிராகரணம்

2. மாயாவாதி நிராகரணம்

(புலவர் - முருகவேள், B.O.L.)

(மலர்-26 ; இதழ்-7 : 318-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு தன் மதக் கொள்கைகளை எடுத்துக் கூறிய மாயாவாதியினை, அடுத்து அவன் பக்கலில் அமர்ந்திருந்த

ஐக்கியவாதி எழுந்திருந்து கீழ்வருமாறு மறுத்துரைக்கின்றான் :—

பிரமாண மறுப்பு

பெத்தம் என்றும் முத்தி என்றும் இரண்டுபடக் கூறிய உன்மதக் கொள்கை பிரமம் ஒன்றுமே உளது எனக் கூறுங்கால், அதற்குப் பிரமாணம் யாதெனை, வேதம் பிரமாணம் எனில்—அவ்வேதம் பிரமம் ஒன்றுமே உளது எனச் சொல்லுவதன்றிச் சீவபரம் என்று இரண்டாகவும் சொல்கின்றது.

வேதம் அங்ஙனம் இரண்டு என்றதும் அபேத சித்தாந்தத்தைச் சொல்லியதாம் எனில்—நீ ஒன்று என்றதற்குப் பிரமாணம் இரண்டு என்றும், இரண்டு அல்ல என்றும் சொல்ல வேண்டுவதில்லை.

பேதம் அபேதம் பேதாபேதம் என்று வேதம் சொல்வதெல்லாம் அப்பிரமம் ஒன்றையுமே எனில்—இரண்டென்றும், இரண்டல்ல என்றும், இரண்டாய் இரண்டல்லவுமாய் இருக்கும் என்றும் அவ்வேதமே கூறுதல் பிரமாண விரோதமாகும்.

பெத்தத்தில் பேதமும் முத்தியில் அபேதமும் என வேதம் கூறுதலின் பிரமாண விரோதமாகாது எனின்—அங்ஙனம் வேறுபடுத்துக் கூறுதலும் அநவத்திதமாய் அறுதியில்லாததாம்.

அற்றன்று, வேதம் இரண்டென்று சொல்லாது ஒன்றேன்றே சொல்லும் என்னில்—முன்னே இரண்டென்று சொல்லிப் பின்னர் ஒன்று என்று சொல்லுதல் குற்றமாகும். அன்றியும், கட்டு நிலையில் சீவபரம் என்று இரண்டாய் இருக்கும் என்றலும், வீட்டு நிலையில் ஒன்றாய் இருக்கும் என்றலும் பொருந்தாது.

இனி, இங்ஙனம் அளவையாகக் கொள்ளப்பட்ட வேதம் யாராலே சொல்லப்பட்டது? தானே தோன்றியதெனில், நீ பிரமம் ஒன்று என்றது ஒழிந்து, பிரமம் ஒரு

---

* 1. பிரமாணம் – அறிகருவி. 2. பிரமேயம் – அறியப்படும் பொருள். 3. பிரமிதி - அறியும் அறிவு. 4. பிரமாதா - அறிபவன்.

முதலும் வேதம் ஒரு முதலுமாக, உனது ஏகம் அநேகமாகப் போகும்.

அன்றியும், வேதம் தானே தோன்றிற்று என்றலும் பொருந்தாது. ஏனெனில், ஒருவர் உச்சரியாமல் ஒலியின் உருவம் தோன்றுதல் இல்லை. வானத்தில் ஒருவர் உச்சரியாமல் ஒலியுண்டாதல் போல, வேதமும் ஒருவர் சொல்லாமல் தானே உண்டாயிற்று எனில்—வானத்தில் வாயு ஏதுவாகக் கொண்டு ஒலியுண்டாவதன்றித் தானே ஒலி தோன்றுது. மேலும் வானத்தில் எழும் ஒலி ஓரேவகைத்தாயும் அறிவிலதாயும் இருக்கும்; ஆனுல் வேதமோ பதம் கிரமம் பாழி முதலிய பலவகை ஒலிகளும் பொருள்களும் உடையதாய் அறிவாய் இருக்கும். ஆதலின் வானத்தில் உண்டாகும் ஒலியினை வேதத்திற்கு உவமை சொல்லுதல் பொருந்தாது.

வேதம் தானே உண்டாகாது என்பது பெறப்பட்டமையின், அதனைக் கூறினர் சிலர் வேண்டும். இவ்வுடலாலே வேதம் சொல்லப்பட்டதெனில், இவ்வுடல் அறியாமை மிக்கதாதலின், அஃது ஒரு சொல்லையும் பொருளையும் சொல்லவல்லதன்று. மேலும், பிரமம் அகண்டிதப் பொருளாதலின், அதனைச் சொல்லையும் பொருளையும் கொண்டு சுட்டிக் கூறுதல் யாங்ஙனம்? ஆதலால் எல்லாம் ஒன்றே என்னும் உன்கொள்கை புரைபடும்.

வேதம் பரப்பிரமத்தால் சொல்லப்பட்டதெனில், அந்தப் பிரமப்பொருள் அகண்டிதமாகையால் பல் நாக்கு முதலிய கருவிகள் அதற்கு இல்லை. இல்லையாகவே, அது வேதத்தினைச் சொல்லுதலும் இயலாததாகும்.

அற்றன்று, பேயானது ஒருவன் உடலைப்பற்றி நின்று பேசினுற்போலப் பிரமமும் ஒருவர் உடலைச் சார்ந்து நின்று வேதத்தைச் சொல்லும் எனில்—பிரமம் ஓர் உடலைச் சார்ந்து நின்று வேதத்தைச் சொல்லுமாயின், தேவருடலைச் சார்ந்து சொல்லிற்ரே? முனிவருடலைச் சார்ந்து சொல்லிற்ரே? யாருடலைச் சார்ந்து சொல்லிற்று? அங்ஙனம் ஒருவருடலைச் சார்ந்து சொல்லிற்றுயின், அது பசுவாக்கியமே யாம், பதிவாக்கியமாகாது; எனவே வேதத்திற்கு நின்மலத்துவம் உண்டாகாது.

உலகம் வேதத்தைச் சுயம்பு என்று கூறுகின்றதே எனில்—உருவமற்ற முதல்வன் உருவம் கொண்டு தோன்ற அவனால் வேதம் கூறப்படுதலின், தானே தோன்றிய சுயம்புவினாலே கூறப்பட்ட வேதமும் ஆகுபெயரால் சுயம்பு எனக் கூறப்பட்டதே யன்றி, அது தானே தோன்றியது அன்று என்க.

வேதம் உம்முடைய தலைவனாற் கூறப்பட்டதாயின் அது தனக்குக் கீழாயுள்ள கடவுளர்களை வணங்கிச் சொல்ல வேண்டுவதென்னை எனில்—அரசனின் குடிகள் நேரே அரசனைக் கண்டு தங்கள் குறைகளைக் கூறிக் கொள்ளமாட்டார்கள். அரண்மனை வாயிற் காவலாளர்களைக் கொண்டு, அடியோங்கள் தங்கட்குப் பழமை மிக்க அடிமைகளாவோம் என்று கூறியவழி, காவலாளர்களின் வாயிலாகக் குடிகளின் குறைகள் தீர்க்கப்பட்டாற்போல, முதல்வனும் எல்லோரும் பக்குவரல்லாதது கொண்டு, அபக்குவராயுள்ளார் வழிபாடு செய்தற்பொருட்டு, அக் கடவுளரையும் சொல்லியிருத்தல் கூடும். இவ்வாறன்றி, முதல்வன் பிற கடவுளரை வணங்கிக் கூறினான் என்றல் சிறிதும் பொருந்தாது.

அற்றேல், முதல்வன் தன்னைத் தானே வணக்கம் கூறிக் கொள்ளுவது எற்றுக்கு? எனில்—பக்குவான்மாக்கள் தன்னை வழிபாடு செய்தற்கு வழிகாட்டுதற் பொருட்டாகும்! அன்றியும், முதல்வன் தன்பெருமையைக் கூறுங்கால் வேறே பிறரொருவர் கேட்கக் கூறுவதொழிந்து, தானே தன் பெருமையைக் கூறிக் கொள்ளான். ஆதலின் யார்க்குக் கூறியது எனில்-உடல் சடமானபடியால் அதனை நோக்கிச் சொல்லியிராது. பிறரை நோக்கிச் சொல்லிற்றெனில், வேதமாகிய பிரமாணம், முதல்வனாகிய பிரமேயம், ஆன்மாவாகிய பிரமாதா, ஆன்மாவின் அறிவாகிய பிரமிதி என்றுநால்வகையாகப் பாகுபாடுடைமையின், நீ முதற்கண் ஒன்று என்றது நன்றாயிருந்தது! எனவே, பிரமம் ஒன்றென்று சொல்லவந்த பிரமாணமாகிய வேதமும் புரைபட்டது. பிரமாணமாகிய வேதம் புரைபடவே, பிரமேயத் தன்மையும் குற்றமாம்.

பிரமேய மறுப்பு

கரும்பிற் பிறந்த சுவை தன்னில் வேறுபாடின்மை பற்றிக் கரும்பிற்குத் தன்சுவை தெரியாமை போல, பிரமமும் தன் இன்பத்தைத்தான் அறியாது என்று கூறினை. அறிவுப் பொருளுக்கு உவமை சொல்கின்றுழி அறிவுப் பொருளையே உவமை சொல்லாமல், அறியாமைப் பொருளால் உவமை கூறுதல் பொருந்தது. மேலும், கரும்பினின்று செய்த கட்டியை அதனிற் பிரித்து வைத்துப் பின்னர்க் கூட்டியவழி, இத்துணைநாள் இதனைப் பிரிந்திருந்து இப்பொழுதே இதனைக் கூடினேம், என்று கருதும் உணர்வு கரும்பிற்கு இல்லை. ஆதலின் நீ கூறிய உவமை பிரமப் பொருளுக்கு இயைவதன்று.

பரப்பிரமமானது உடல் முதலிய உலகமாகப் பலவாய் இருந்த தன்மை, பொன் ஒன்றே பணிபலவாக இருக்கும் தன்மை போலும் எனின்—இவ்வுலகின்கண் யாண்டும் செய்வோரை யின்றிச் செய்தொழில் நிகழ்தல் இல்லை. பொன்னானது ஒருவன் செயற்படுத்தவே பலபணிகளாக உருவம் பெற்றதன்றித் தானாகப் பலபணிகளாக உருவம் கொள்ளாமை போல, பிரமம் உலகமாய் விரிந்ததும் வேறே ஒருவன் செயலால் நிகழ்ந்ததாதல் வேண்டும்.

அற்றன்று, எல்லாவற்றையும் இங்ஙனம் செய்தது பிரமம் ஒன்றே எனில்—இவ்வுலகில் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்பவர்களைப் போல அவர்களாற் செய்யப்படும் பொருளுக்கு முதலாயுள்ள உபாதானம் இராது. குயவனாற் செய்யப்படும் சால் குடம் சட்டி பானை என்னும் பொருள்களுக்கு முதலாயுள்ள உபாதானமாகிய மண், குயவனைப் போல் இல்லாமை காண்டும். ஆதலின் பிரமத்தை இன்றி உலகிற்கு உபாதானம் வேறே ஒன்று இருத்தல் வேண்டும்.

உலகிற்குப் பிரமத்தின் வேறாக உபாதானம் ஒன்று உண்டாயின் அதுவே அமையாதோ? இந்தப் பிரமம் எற்றிற்கு? எனில்—உபாதானம் சடமாய் இருத்தலின் அது தானே உலகமாகாது; அவ்வுபாதானத்தைக் கொண்டு உலகைப் படைக்கும் முதல்வன் ஒருவன் வேண்டும். செய்வோரை இன்றி யாண்டும் செய்வினை நிகழ்தல் இல்லை.

இப்பியானது வெள்ளியாகத் தோன்றினாற்போல அசத்தியமாய் உள்ள பிரபஞ்சமும் சத்தியமாகத் தோன்று கின்றது என்றாய்! அங்ஙனமாயினும், அறிவாயுள்ள பிரமம் சடமாயுள்ள உலகத்தை ஓரே வகையாகத் தோற்று விக்காது. பிரமத்தின் முன் அசத்தியமாய் உள்ள பிரபஞ் சமும் சத்தியமாகத் தோன்றும் எனில்—நீ முன்னர் இவ் வுலகினை மித்தை என்றது அமையாது. அங்ஙனம் ஆரா யாது கூறிய நீ, உன்னுடைய கோட்பாட்டினையே முன் னொடுபின் மலைவுறக்கொண்டு மறந்தாயாகல் வேண்டும்.

அற்றன்று, பிரமம் உபாதிகள் வசத்தினால் தன்னைச் சீவன் என்று மயங்கி நிற்கும் விவகாரநிலைக்கு உலகம் என்று கொள்ளப்படுவதொழிந்து, நான் பிரமம் என் றறிந்த பரமார்த்த நிலையில் எல்லாம் பொய்யா யொழியு மாகலின், ஆண்டு உலகம் என வழங்கப் பெறாது எனில்— இவ்வுலகம் பரமார்த்தமாயுள்ள பிரமத்திலே நின்றும் உண்டானதாயின், அசத்தியமாயுள்ள பிரபஞ்சமும் சத் தியமாயுள்ள பிரமமாகவேண்டும். உலகம் பொய்யாயிருத் தலின் இஃது அப்பரமார்த்தத்துக்குப் பணியன்று எனில்— உலகம் பிரமத்திலே நின்றும் தோன்றியதுஎன்று முன்னே நீ கூறியதனை விட்டுவிட்டு, உலகிற்கு முதற்காரணம் இன்னதெனக் கூறுவாயாக! மேலும், பிரமப் பொருள் எல்லா உபாதிகளையும் கழன்றபரமார்த்த நிலையாய் இருப்ப தொன்று. நீயோ மாயா உபாதி (கருவி)களோடு சம்பந் தப்பட்டிருப்பவன். ஆதலின் நீ அந்தப் பிரமத்தின் வேறான பொருளாதல் வேண்டும்.

அற்றன்று, அந்தப் பிரமப் பொருளே நான் என்று கூறுவாயாயின், அஃது அறிவாய் இருக்க இஃது அறி யாமையாய் இருப்பதென்னை? உபாதிகள் வசத்தால் எனின், அந்தப் பிரமமும் அவ்வாறே அறியாமையுடைய தாதல் வேண்டும். நீயும் அந்தப் பிரமமும் ஒரு பொருளா யிருப்பவும் இஃது உபாதி வசத்தால் அறியாமல் இருக்கும் என்றல் பொருந்தாமையின், நீ ஒன்றைச் சொல்ல உன் பிரமாணம் வேறொன்றைச் சொல்லுதலின், நீ பிரமாணத் தையும் கைவிட்டாயாகின்றனை.

பிரமாணத்தின்படியே யான் கூறுகின்றேன் எனின்—பிரமாணம் காண்டல் கருதல் உரை என மூன்றுவகைப் படும். அம் மூன்றன் வாயிலாகவும் புகுந்து ஒருபொருளை அறிந்து வருமாயின், மாற்றம் மனங் கடந்த உனது பிரமமாகிய பிரமேயப் பொருள் யாதாய் முடியும் ?

பிரமிதி மறுப்பு

பொன்னும் பணியும் போலப் பிரமமும், பிரபஞ்சம் என்றாய்! பணியானது பின்பு பொன்னோடு கூடப் பொன்னாய் நின்றது கண்டோம்; பிரபஞ்சமானது பின்பு பிரமத்தோடு கூடிப் பிரமமாய் நின்றது கண்டோமில்லை. ஆதலின் அது பொருந்தாது. மேலும் பொன்னும் பணியும் ஒன்றாய் இருக்க, பிரமமும் பிரபஞ்சமுமோ முறையே அறிவும் அறியாமையுமாக உள்ளன.

அற்றன்று, சித்தாயுள்ள சிலந்தி சடமாயுள்ள நூலைத் தந்த தன்மை போலச் சித்தாயுள்ள பிரமத்திலே சடமாயுள்ள பிரபஞ்சம் தோன்றும் எனின்—சிலந்தி எப்பொழுதும் தன்வயிற்றினின்று நூலைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும்; ஆனால் பிரபஞ்சமோ பிரமத்தினின்று ஒருகால் தோன்றுவதன்றி எக்காலும் தோன்றிக்கொண்டு இருப்பதில்லை. மேலும் சிலந்தியினின்று தோன்றும் நூல் ஒரு தன்மைத்தாகக் காணப்படப் பிரமத்தினின்று தோன்றிய பிரபஞ்சமோ பல தன்மையாகக் காணப்படுகின்றது.

காய் இலை பழம் பூ முதலியவற்றை மரமானது தருதல் போலவும், திரை நுரை திவலை குமிழ் முதலியனவற்றை நீரானது தரும் தன்மை போலவும், பிரமந்தானே பலவிதமாயுள்ள உலகமாய் இருக்கும் எனின்—அறிவாய் இருப்பது அறியாமையாய் இருக்கும் என்றும், அறிவினிடத்தில் அறியாமைப் பொருட் கூட்டங்கள் தோன்றும் என்றும் எவரும் கூறார்.

அற்றேல், இவ்வுலகம் தோன்றும் முறைதான் யாது எனில்—சூக்குமமாய் உள்ள விதையானது இலைபழம் விழுது என்பனவற்றையுடைய தூலமாகிய ஆலமரத்தைத் தந்த தன்மைபோல, தூலமாய்ப் பலவாய் இருக்கிற உலகத்

தினையும் சூக்குமமாய் அசத்தாய் இருப்பதொரு முதற் பொருள் தந்ததாதல் வேண்டும்!

அங்ஙனமன்று, நெல்லினின்று வைக்கோலும் பதரும் தோன்றினாற்போலச் சித்திலேயின்றும் சடமான பிரபஞ்சம் தோன்றும் எனில்—நெல்சூக்குமமாய்ச் சடமாயிருக்கையால் அது வைக்கோலுக்கும் பதருக்கும் உபாதானம் ஆகும். காரணமின்றிக் காரியம் பிறவாது. அக்காரணமும் தம் காரணமா யிருப்பதொழிந்து அயற்காரணத்திலிருந்து காரியங்கள் தோன்றமாட்டா. அங்ஙனம் தோன்றுமாயின், பருத்தி காரணமாக ஆடை தோன்றுவதன்றி, மண்காரணமாகவும் ஆடைதோன்றுதல்வேண்டும். எனவே, சடப்பொருள் காரணமாகச் சடப்பொருள் தோன்றுமேயன்றிச் சித்துப்பொருள் காரணமாகச் சடப்பொருள்கள் தோன்றமாட்டா என்பது பெறப்படும். ஆதலின் சடமாய் அழிந்து போவதாயுள்ள உடல் முதலிய உலகிற்குச் சித்தாய் அழிவில்லாமல் இருப்பதாகிய பிரமம் காரணம் என்ற நின்கூற்று இயைவதன்று.

மேலும், சித்தாயுள்ள பிரமத்தில் சடமாயுள்ள பிரபஞ்சம் தோன்ற வேண்டுவதென்னை? பிரபஞ்சம் தோன்றுதல்பிரமத்திற்கு இயல்பாகும் எனில்–நெருப்பிற்கு வெம்மை இயல்பானாற் போல, பிரமமாகிய சித்துக்கு நீ இயல்பென்று கூறிய பிரபஞ்சமும் சித்தேயாதல் வேண்டும். பிரபஞ்சம் சடம் எனில், முன்னர் நீ சத்தாகிய பிரமத்திற்கு இயல்பு பிரபஞ்சம் என்றதனைக் கைவிடுக!

சத்தாகிய பிரமத்திற்கு இயல்பு சடமாகிய பிரபஞ்சம் என்றுரைத்தல், பெருவிளக்கில் தோன்றிய ஒளியானது கரியமையைத் தந்தமைபோலப் பொருந்துவதேயாம் எனில்—விளக்கினிடத்தில் கறுத்த மையானது தோன்றியமை விளக்கினுடைய இயல்பன்றித் திரிநெய் முதலிய உபாதிகளின் வினைவேயாகும். அதுவன்றியும், பிரமத்தில் தோன்றிய உலகம் மீண்டும் பிரமத்திலேயே ஒடுங்கும். ஆனால் விளக்கில் தோன்றிய மையானது மீண்டும் அந்த விளக்கின்கண் சென்று ஒடுங்காது.

பிரமம் சுத்தப்பொருள், அசுத்தமாயிருப்பதொரு பொருளன்று; அவ்வாறிருப்பவும் அது மாயா உபாதிகளோடு கூடி இருக்கவேண்டுவதென்னை? அந்தப் பிரமப்

பொருளின்பால் ஓர் அவதரத்தில் இவ்வுபாதிகள் வந்து கூடின எனில், அங்ஙனம் கூடியமைக்கு ஏதேனும் ஒரு காரணம் உளதாதல் வேண்டும். மாசற்ற வானத்தை மேகமானது போந்து மறைத்த தன்மை போலச் சுத்த மாயுள்ள பிரமத்தையும் மாயா உபாதிகள் இயல்பாக வந்து கூடின. இதற்கொரு காரணம் வேண்டுவதில்லை எனில் - காரணமின்றியே இவ்வுபாதிகள் இயல்பாக வந்து பொருந்துமாயின், எல்லா உபாதிகளையும் நீக்கிப் பழைய தூய்மை யடைந்தவர்கள் மாட்டும், வீட்டு நிலையிற் கூட இவ்வுபாதிகள் ஒரு காரணமும் வேண்டாமலே வந்து பொருந்தும். ஆதலின் வீடு என்ற ஒன்றினைக் கூற வேண்டாமல் போகும்!

அங்ஙனமன்று, பிரமத்துக்கு ஞானம் உண்டாகத் தக்கதாகப் பொருந்திய மாயா சரீரம், பிரமத்தின் விளையாட்டே எனில் - விளையாடுகிறவர்களுக்கு விளையாடப் பட்ட பொருள் வேறாதற்போல, பிரமத்தினுடைய விளையாட்டாகிய மாயா சரீரமும் பிரமத்திற்கு வேறாயிருப்ப தொன்று. ஆதலின் பிரமத்தினிடத்திலே உபாதிகள் தோன்றிப் பிரமத்தை மறைக்கும் என்று, முன்னர் நீ கூறியதனை மறந்தாயாகல் வேண்டும். உலண்டுப் புழு வானது தன்பால் நின்றும் தோன்றிய நுண்ணிய நூலாலே தனக்கு ஒரு கூட்டினை அமைத்துக்கொண்டு தான் அதற் குள்ளே புகுந்து பின்னர்ப் புறப்படமாட்டாமல் அதற் குள்ளே அகப்பட்டு இறந்த தன்மைபோல, பிரமமும் மாயா சரீரத்துக்குள்ளே விளையாட்டாக வந்து புகுந்து, பிறகு தானாகப் புறப்படமாட்டாமல் நிற்கையால், அந்தப் பிரமத்துக்கு எல்லா முதன்மையும் எல்லா அறிவும் இல்லை யாய் ஒழியும்! இங்ஙனம் மாயா சரீரத்திற் புகுந்து கொண்டு அதனைத் தானாக விடுவித்துக்கொள்ள மாட்டாமல், பிரமம் பாசத்தாற் கட்டுற்று நிற்றலின், ஒரு குரு முதலின் துணையை வேண்டிநிற்கும். இது பிரமமாகாது.

அங்ஙனமன்று, செம்பானது இரதகுளிகையோடு கூடிய வழி காளிதம் நீங்கிப் பொன்னாகிய தன்மைபோல, பிரமத்துக்குண்டாகிய சரீர சம்பந்தத்தையும் அதன்பால் தோன்றிய விவேகஞானம் நீக்க அந்தப் பிரமப்பொருள் சுத்தம் அடையும் எனில் - இங்ஙனம் சுத்தப்பட வேண்டிய

நிலையில் அசுத்தமாய் இருக்கிற பிரமத்தை நீ 'நித்தன் அறிவன் சுத்தன்' என்றுரைத்த வித்தகம் என்னை? மேலும், நீ கூறிய விவேகஞானம் அவித்தையோடும் கூடிக் கொண்டுள்ள பிரமத்தின் வேருக வேண்டும்! அவித்தையோடு கூடி நிற்கும் பிரமமே விவேகஞானம் எனில், அத்தகைய பிரமம் உயிர்களின் ஒன்ருதலே வேண்டும். தூயமேலான பிரமப் பொருளைத் தூயனவல்லாத இழிந்த உயிர்களுள் ஒன்ருக வைத்துக் கூறும் நீ மிகவும் பொல்லாதவனே யாவாய்!

பிரமாதா மறுப்பு

மணிகள் பலவாயிருப்பினும் அவற்றை இணைக்கும் நூல் ஒரு தன்மையாக இருந்தாற்போலவும், பசுக்கள் பலவாயினும் அவற்றின் பால் ஒரு தன்மைத்தாதல் போலவும், பாண்டங்கள் பலவாயினும் அவற்றில் நிழலாடி நிற்கும் ஞாயிறு ஒன்ருதல் போலவும், கூவல் ஆழி குளம் சிறுகுழி கால்கள் முதலியன பலவாயினும் அவையிற்றிலுள்ள தண்ணீர் ஒரு தன்மைத்தாகவே விளங்குதல் போலவும், பலவகை யோனி பேதங்களாய் உள்ள உடல்களுக்கு ளெல்லாம் இருப்பது பிரமம் ஒன்றே எனக் கூறினுய்! அங்ஙனமாயினும், மணிகளும் நூலும் தாமாக இணைந்தன வல்ல. ஒருவன் கோவைப் படுத்தியவழியே அவைகள் இணைந்து நின்றன; அதுபோலப் பிரமத்தையும் இவ்வுடல்களையும் இயைவித்தவன் ஒருவன் இன்றியமையாது வேண்டப்படுவன்! நீ கூறிய 'பசுக்களும் பாலும் போலும்' என்னும் அடுத்த உவமை, பிரமம் அறிவிலதாயும் அப் பிரமம் இயைந்துள்ள இவ்வுடல்கள் அறிவுடையனவாயும் இருந்தவழியே பொருத்த முடையதாகும்! இதற்கும் அடுத்துக் கூறிய உவமைகளுக்கியைய, கூவல் ஆழி குளம் குழி வாய்க்கால் முதலியனவற்றில் தண்ணீர் ஒரு தன்மைத் தாகவே உளதெனவும், குடங்கள் தோறும் ஞாயிறு நிழலாடித் தோன்றுகின்றது எனவும் கண்டுணர்ந்து கூறுதற்கு மக்கள் சிலர் வேண்டப்படுவர். பிரமம் ஒன்று தவிர வேறு பொருளில்லை என்ற உனக்கு இவ்வுவமைகள் யாங்ஙனம் பொருந்தும்?

கண்ணுடியின்கண் நிழலானது தோய்வற நின்ருற் போல உடலுக்குள் பிரமம் தோய்வற நிற்கும் எனின் - தன்னிடம் தோன்றும் நிழலைக் கொண்டு கண்ணுடியானது இயங்குமாயின், பிரமத்தின் நிழலைக் கொண்டு இவ்வுடலும் கூடியும் பிரிந்தும் நின்று இயங்கும். நிழலால் கண்ணுடி இயங்காமை தெளியப்படுதலின், பிரமத்தின் நிழலால் இவ்வுடலும் இயங்காமை தெளியப்படும்.

காந்தம் அசைவற நிற்க அதன் முன்னிலையில் இரும்பு அசைதல்போல, பிரமமும் அசைவற நிற்க அதன் முன்னிலையில் உடலானது இயங்கும் எனின் - பிரமமானது காந்தம் போலக் கண்டிதப் பொருளாயின்றி அகண்டிதப் பொருளாய் விளங்குதலின், அதன் முன்னிலை யல்லாத இடம் யாண்டுமில்லை. இங்ஙனம் எங்கும் பரவியுள்ள பிரமத்தின்முன் உடல்மட்டுமே யன்றிக் கடம் படம் முதலியனவும் இயங்கித் தொழிற்படுதல் வேண்டும். ஆனுல் உடல்மட்டுமே இயங்க ஏனையன இயங்காது கிடப்பக் காண்டலின், பிரமத்தின் முன்னிலையில் எல்லாப் பொருள்களும் இயங்கா நிற்கும் என்றது பொருந்தாது.

காந்தமும் இரும்பும் தனித்தனியே பிரிந்து தொலைவிற் கிடந்தவழி அவை ஒன்ருெடொன்று பொருந்தா ; காந்தமும் இரும்பும் கூடிக் கிடந்தனவாயினும் அவை தாமே தொழிற்பட மாட்டா ; அவ்விரண்டனையும் நேரொக்கப் பிடித்துக் காட்டுவார் சிலரைப் பெற்றவழியே இரும்பானது காந்தத்தைச் சென்று தலைப்படுவதாகும். எனவே, பிரமத்தையும் உடலையும் கூட்டித் தொழிற்படுத்தவல்ல முதற் பொருள் ஒன்று வேண்டப்படும். மேலும், காந்தமானது இழுத்துக் கொள்ளும் வல்லமை யுடையதே யன்றி அதனை நீக்கிக் கொள்ளும் தன்மை பெற்றதன்று. பிரமத்தின் முன்னிலையில் உடல் பிரிந்தும் கூடியும் வருதலின் நின் உவமை ஏற்புடைத்தாகாது.

கனவிற்புலியும் கயிற்றிற் பாம்பும் நனவில் உண்மை யுணர்ந்தவழி இன்ருதல் போல, இன்பதுன்ப நுகர்ச்சிகளும் பிரமத்துக்கு இல்லை என்ருய் ! கனவு பொய்யன்று. நனவில் பருவுடல் கொண்டு சுவை யொளியூருேசை நாற்றங்களை அறிந்து துய்ப்பது போலவே, கனவில் நுண்ணுடல் கொண்டு அவையிற்றை உயிர் அனுபவிக்கும்.

நனவு கனவு என்னும் இருவகை நிலையினும் உயிர்நுகர்வது பிராரத்தவினையின் பயனேயாகும். இவ்விரு நிலைகளிலும் நுண்மை பருமை என உடல் வேற்றுமையுண்டு. கயிற்றைப் பாம்பு என மயங்கியமைக்குக் காரணம் புற்றும், அதன்கட் கிடந்த கயிறும், இருளில் ஒளி குன்றிய கண்ணுமேயாம். அம்மூன்றும் சடப்பொருள்கள். ஆயின், நீ கூறும் பிரமமோ அறிவுப் பொருள். அறிவாயுள்ள பிரமம் கயிற்றைக் கயிறென்று அறிய மாட்டாமல் மயங்குமாயின், அதனை அறிவு என்றல் பொருந்தாது. பிரமம் கயிற்றைப் பாம்பென்று மயங்கக் கருதி அஞ்சும் எனின், அதனை முதற்பொருள் என்றல் ஒல்லாது. மேலும், கனவிற் கண்ட புலியும் கங்குலிற் கயிற்றிற் கண்ட பாம்பும் பொய் என்று ஒருகால் தெளிந்துவைத்தும், மீளக் கனவு காண்புழிக் கங்குலிற் கயிற்றைக் கண்ட இடத்துப் பிரமம் அச்சமுறுதல் என்னை? எனவே, இவ்வுடலோடு கூடி மயங்கி நிற்பது பிரமம் அன்று என்பதே தேற்றம்.

சிவந்த பூவோடு கூடிய படிகம் தன் தன்மை இழந்து அப்பூவின் நிறமாய் இருந்ததேனும், அதன்கண் ஒரு சற்றுந் தோய்வற நின்றாற்போல, பிரமமும் தன்பால் நெருங்கிப் போதரும் வினைகளை நுகருமிடத்து நுகர்ச்சிப் பொருள்களின் வண்ணமாய் இருந்ததேனும் அவற்றில் சற்றும் தோய்வறநிற்கும் என்றாய்! படிகம் பூவோடு கூடியிருந்த பொழுது சிவந்த நிறம் ஒன்றுமேயாய் இருந்தாற்போல, வினையோடு கூடிய பிரமமும் ஒரு வகையாய் இராமல் பலவகையாய் இருப்பதென்னை? நல்வினை தீவினைகள் பலவாயிருத்தலின் பிரமமும் பலவகையாய் இருக்குமெனின், முன்னர் இப்பிரமத்தினை ஆண்டு காத்தருளும் விவேகஞானமும் அறியாமையோடு கூடியிருக்கும் உடலும் உண்டென்றாய்! ஈண்டுப் பலவகைப்பட்ட நல்வினை தீவினைகளும் உண்டென்கின்றாய்! ஆதலின் களவு செய்த கள்ளர்களைக் கொணர்ந்து சிறைசெய்து அதற்குத் தக ஒறுக்கும் அரசர்களைப் போல, முற்பிறவிகளிற் செய்த பழைய வினைத்தொடர்பால் உடலாகிய சிறைச்சாலையில், உன்னுடைய பிரமத்தை அடைத்து இன்பதுன்பங்களை நுகர்விக்கும் முதல்வனொருவன் உளனாதல் வேண்டும்!

அன்றியும், வினைக்கீடாக மேற்கொண்ட உடலில் பிரமம் மூன்று அவத்தைப்படும் என்று கூறினுய்! உன் பிரமமோ குறைவிலா நிறைவாதலின், அது நனவு கனவு சுழுத்தி என்னும் அவத்தைகளில் அடங்காது. உடல் அறியாமைப் பொருளாதலின் அவத்தையனுபவம் அதற்கு நிகழவழியில்லை. ஆதலின் இவ்வுடலோடு கூடிய மூன்றவத்தைகளையும் அனுபவிப்பவர் யார்?

யான் அவத்தை என்றது அந்தக்கரணங்கள் பிரிந்த இடத்துண்டாகிய மயக்கத்தை எனின் - அந்தக்கரணங்களோ, அன்றிப் பிரமமோ, இவ்வுடலுக்கு முதன்மையுடையது யாது? பிரமமே முதன்மையுடையது எனின்- அப்பிரமம் நிற்க அந்தக்கரணங்கள் நீங்க மாட்டா. அந்தக்கரணங்களே முதன்மையுடையன எனின், எல்லா முதன்மைகளையும் உடையது பிரமம் என்று வேதம் கூறீயது பழுதுபடும். அவ்வாறன்று, அவத்தையுறுவது உடற்குள்ளே அகப்பட்டு நிற்கும் பிரமமே எனில்—சாளரவாயிலிற் புறம்பே நின்று உள்ளே ஒரு விரலை நீட்ட, அவ்விரலின் நுனியில் ஒரு குளவியானது கொட்டிய வழி, அந்நோயை அவ்விரல் மட்டுமே அனுபவிக்குமாயின், இவ்வுடலிற் பொருந்தி நிற்கும் பிரமமும் அவத்தையைத் தானே தனியாக அனுபவித்ததெனலாம். குளவி கொட்டிய நோய் விரலுக்கு மட்டுமேயன்றி உள்ளந்தாள் நின்று உச்சியளவும் தெரிதலின், உடலிற் பொருந்தியிருக்கும் பிரமம் மட்டுமே அவத்தையுறும் என்றது பொருந்தாது.

கண்ணாடியிற் றோன்றிய கண்ணுக்கு இழைத்த துன்பம், முகத்திலுள்ள கண்ணுக்கு எய்தாமை போல, இன்பதுன்ப நுகர்ச்சிகளும் உடலுக்கேயன்றி அறிவாகிய பிரமத்துக்கு இல்லை என்ருய்! வேதம் இன்பதுன்பங்களை நுகர்வது அறிவேயாம் என்று கூருநிற்ப, நீ அதனை ஒழித்து, உடலுக்கே யன்றி அறிவுக்கு இன்பதுன்ப நுகர்ச்சி இல்லை என்றல், நூல் மாறுபாடும் காண்டல் மாறுபாடுமாகிய குற்றமாம். மேலும், பிரமம் என்பது அகண்டிதப் பொருள் என்று முன்னர்க் கூறிய நீ, இதுபொழுது பிரமம் மாயாவுபாதிகளினுல் கட்டப் பெற்று நிற்கும் என்றுரைத்தல், வானில் அசையும் காற்றினைப்

பிடித்து அதனை அசையாத வண்ணம் பருவிலங்கிட்ட ஒருவன் செய்தி போலவே உளது.

சீவன் முத்தி மறுப்பு

வானத்தை மறைத்த மேகத்தினை அவ்வானத்தில் தோன்றிய காற்றானது நீக்கி மாசின்றி வயங்கச்செய்தல் போல, பிரமத்தைக் கட்டுறுத்திய மாயாவுபாதிகளை அப் பிரமத்தில் தோன்றிய விவேகஞானமானது போக்கிப் பிரமத்தைத் தூயதாக்கும் என்றாய்! பிரமத்துக்கு விவேக ஞானம் முன்னரே உளதாயின், அஃதுள் வழி இடையே மயக்கம் வர வாயிலில்லை. இவ்விவேகஞானம் பிரமத் துக்கு இடையே தோன்றியதெனின், முன்னரே இல்லாத பொருள் பின்னர் ஒருஞான்றும் தோன்றாது.

முன்னரே இல்லாத பொருள் பின்னர்த் தோன்றக் காண்டுமே எனில், இல்லாத பொருள் தோன்றும் என்றல், வானத்தில் ஒரு தாமரைப்பூ மலர்ந்தது என்று சொல்லுதலையே ஒக்கும். அவ்வாறன்று, முன்பு இல்லாத தீ விறகிற் பின்பு ஒரு நிலையில் உண்டாதலைப் போல, முன்னர் இல்லாத விவேகஞானமும் பிரமத்துக்குப் பின்னொருகால் உண்டாகும் எனில் - விறகினிடத்து முன்னர்க் காணப் படாத நெருப்புப் பின்னர் ஒருவன் அரணியை வைத்துக் கடைந்தவழி யன்றித் தானே உண்டாகாது. அதுபோல உன் பிரமத்துக்கும் முன்னர் இல்லாமல் பின்னர்த் தோன் றிய விவேகஞானம் வேறே ஒருவன் தோற்றுவிக்கத் தோன் றியதாதல் வேண்டும்.

மேலும், அறியாமையாகிய பெத்த நிலையில் தோன்றிய விவேகம் விறகில் தோன்றிய நெருப்பை ஒக்குமாயின், அறிவாகிய முத்திநிலையில் தோன்றும் விவேகஞானம் அவ்விறகில் தோன்றிய வெவ்விய தழலை யொக்கும். விவேக ஞானம் தோன்றிய இடம் அந்த விறகினை ஒக்கும். எனவே, விவேகஞானம் தோன்றியது பிரமத்தில் அன்றி மாயா அவித்தையிலேயாக வேண்டும். இது காண்டல் விரோதம் என்னும் குற்றமாம்.

ஓரொரு வைக்கோலாகவும் கழியாகவும் மரமரிகவும் பறித்துப் போட்டவழி வீடென்பது இல்லையாய்ப் போகுந் தன்மை போலவும், ஓரொரு நூலாகக் கழித்தவழி ஆடை

என்பது இல்லையாய்ப் போதல் போலவும், உடலாகக் கூடிக் கொண்டிருக்கும் எல்லாக் கருவிகளையும் இதுநாம் அன்று இதுநாம்அன்று என மறுத்துக் களைந்தவழி, அந்தப் பரந் தானே இந்தச் சீவனாய் இருந்ததென்றாய்! இருளின் முன்னே ஞாயிறும் ஞாயிற்றின் முன்னே இருளும் நில் லாமை போல, அறிவாகிய பிரமத்தின் முன்னே அறி யாமையாகிய உடல் முதலிய உலகம் தோன்றி நில்லாது; அறியாமையாகிய உடல் முதலிய உலகின்முன்னே அறி வாகிய பிரமமும் தோன்றி நில்லாது. அன்றியும், இருளல் லாத தூய ஒளியும் ஒளியல்லாத முழு இருளும் ஒரு காலத் தும் தம்முள் ஒன்றற்கொன்று பயன்படுதல் இல்லை. இருளோடு கூடி இருளை நுகர்ந்தும், ஒளியோடு கூடி ஒளியை நுகர்ந்தும், இருளும் ஒளியும் என்னும் இரண்டும் ஆகாமல், தனியே ஒரு முதலாய் நின்ற கண்ணின் தன்மை யைப்போல-அறிவாயுள்ள பதியோடு கூடி இதுபதி என்று அறிந்தும், அறியாமையாயுள்ள பாசத்தோடு கூடி இது பாசம் என்றறிந்தும், பதியும் பாசமும் ஆகிய இரண்டும் ஆகாமல், பசு என்று தனியே ஒரு முதல் உண்டென்று அறிவாயாக!

பிரமமே பிரமமானால், அதனால் பிரமத்துக்கு உண் டாகும் பயனென்னை? பிரமம் தன்னிடத்தில் தன்னியல் பைத் தானே காணுமாயின், கண்ணானது தன்னிடத்தில் தன்னியல்பைத் தானே காண வல்லதாதல் வேண்டும். பிரமம் தன்பால் நிகழும் இன்பத்தைத் தானே நுகரும் எனில், பிரமம் இந்தக் கட்டுநிலை உண்டாவதற்கு முன்னே தன்பால் நிகழும் இன்பத்தைத் தான் நுகராமை என்னை? கருப்புக் கட்டியானது தன்பால் உள்ள சுவையைத் தான் நுகராது இருந்தது போலும் எனில், கருப்புக்கட்டி தன் சுவையைத் தான் என்றும் நுகர்தலில்லை; அதுபோலப் பிரமமும் தன் இன்பத்தைத் தான் துய்த்தல் ஒரு ஞான்றும் இல்லை. கருப்புக் கட்டியின் சுவையை நுகர்வோன் வேறொருவனாதல் போல, பிரமத்தின் இன்பத்தையும் அதனின் வேறாய்க் கட்டுற்றுநிற்கும் உயிரே அக்கட்டு நீங்கியபோது நுகர்தல் பெறப்படும்.

தத்துவமசி மகா வாக்கியம், பிரமப்பொருள் ஒன்றே, அதனிற் பிறபொருள்கள் இல்லை என்னும் கருத்துடையது

என்றாய்! தத்—அது, துவம்—நீ, அசி—ஆகின்றாய் எனப் பொருள்படும் மூன்று பதங்களையுடைய மகாவாக்கியத்திற்கு, பிரமப்பொருள் ஒன்றே அதனின் வேறாய பொருள்கள் இல்லை என்றல் கருத்தாதல் செல்லாது. ஒருவனது ஆண்மை கருதி அவனை 'நீ புலி ஆயினை' என்றவழி, நீ என்பதொரு பொருளும், புலி என்பதொரு பொருளும், ஆதற்குக் காரணமாகிய ஆண்மை என்பதொரு பொருளுமாக முப்பொருள்கள் உண்மைதெளியப்படும். அன்றியும், 'புலியாயினை' என ஒருவனைக் கூறியவழி, அவன் உண்மையிற் புலியாகின்றானல்லன்; புலியைப் போலும் ஆண்மையினையே யுடையவனாகின்றான். அதுபோல, நீ பிரமப் பொருள் ஆகின்றாய் என்புழி, நீ பிரமமாகவே ஆகிவிடுதலில்லை, பிரமத்தைப் போலும் கட்டற்ற நிலையையே எய்துகின்றாய் என்பதே கருத்து. புலிவேறு புலியாகின்றவன் வேறாதல் போல, அகம்தானே பிரமமாகா நின்றது என்புழியும், அகமும் பிரமமும் வேறு வேறு பொருள்களாதல் தெளிவு.

நீரின் அசைவால் நீர்க்குள் இருக்கும் நிலா அசைந்ததாயினும் உண்மையில் நிலா அசையாமை போல, உடலின் அசைவால் உடலுக்குள் இருக்கும் பிரமமும் அசையுமாயினும், உண்மையிற் பிரமத்திற்கு அசைவு இல்லை என்றாய்! நிலாவானது தனது அசைவின்மையைத் தானே உணர்ந்து கொள்ளவல்லதன்று. அதனைக் கண்டுணர்ந்து சொல்லவல்ல வேறொருவன் உளனாதல் வேண்டுதலின், ஏகம் பிரமம் என்ற நின் கூற்றுப் புரைபட்டொழியும்.

பரழத்தி மறுப்பு

குடம் உடைந்தவழிக் குடத்திலிருந்த காற்று வானத்திலுள்ள காற்றோடு கலந்துவிடுதல் போல, இவ்வுடல் நீங்கிய வழி இவ்வுடலின்கண் அடைபட்டுக் கிடந்த அறிவு பிரமமாகிய பேரறிவோடு கலந்துவிடும் என்றாய்! காற்றானது குடத்தில் அடைபட்டிருந்த வழி எத்தகைய துன்பத்தையும் நுகர்ந்ததில்லை; பின்னர் வான் வெளியிற் கலந்த பொழுதும் எவ்வகை இன்பத்தையும் எய்தியதில்லை. அது போல, பிரமமும் உடலுக்குள்ளே அகப்பட்டு நின்றபோது ஒரு துன்பத்தையும், உடலை நீங்கிய பொழுது எத்தகைய

இன்பத்தையும் நுகராத தன்மைத்தாதல் வேண்டும். ஆனால் அதற்கு மறுதலையாக, உடலில் நிற்கும் அறிவோ, துன்பத்தை நுகர்ந்த மறுகணமே இன்பத்தையும் உடன் துய்க்கக் காண்கின்றோமாதலின், நீ கூறிய குடாகாய உவமை பொருத்தமிலதாகும்.

எல்லாம் பிரமம் என்று நீ கூறுவது உண்மையாயின், ஒருவன் நான் பிரமம் என்று தெளிந்தவழி, ஏனையோர் எல்லோரும் ஒருங்கே வீடுபேறு எய்துதல் வேண்டும். பிரம ஞானம் உணர்ந்தோரே முத்தியடைவர், அதனை யுணரா தார் முத்தியை யடையார் எனின்—உணர்ந்தவர் உணராத வர் எனக் கூறும் நின் கூற்றின்படி, பிரமத்தை ஒழிந்த உயிர்த்தொகுதியும் பலவகையாய் இருக்கும் எனத் தெளிக.

பதி ஞானத்தின் அருமை

முத்தியை அடையாதவர்கள் வேள்வி முதலாயுள்ள கன்மகாண்டங்களைச் செய்தொழுக, அதுகாரணமாக அவர்களுக்குப் பின்னர் விவேகஞானம் உண்டாகும் எனின்—பிரமத்தை மாயா அவித்தைகள் ஒருநிலையிற் போந்து பொருந்தி மயக்கி நிற்கும் என்ற நீ, இன்ன கார ணத்தால் பிரமத்தை மாயா அவித்தைகள் வந்து பொருந் தின எனக் கூறுகின்றிலை. கன்மம் காரணமாக விவேகம் உண்டாகும் என்றதுபோல, பிரமத்தை மாயா அவித்தை கள் வந்து பொருந்தியமைக்கும் காரணம் உளதாதல் வேண்டும்.

தீக்கடை கோலை மரத்தில் வைத்துக் கடைய அதனில் தோன்றிய தீ, கோலையும் மரத்தையும் ஒருசேரச் சுட் டெரித்தாற்போல, விவேகம் கன்மங்களை அழித்தொழிக் கும் என்றாய்! பிரமஞானம் என்பது ஒரு சிறிதும் இல் லாதவர்கள் கூட, எமக்குப் பிரமஞானம் உண்டாகிவிட் டது, இனி எமக்கு ஆசாரம் ஏதும் வேண்டுவதில்லை என்று கூறிக்கொண்டு, வேதத்திற் கூறப்பெற்ற நல்லொழுக்கம் நன்னெறிகளைத் தாமே வலிந்தொழித்து விட்டுப் புல்லிய ஒழுக்கங்களை மேற்கொண்டு திரிதல், 'பொறியோ போத நெறியோ' அறிகிலம். பிறவித் தொடர்பை நீக்கிக்

கொள்ளுவதற்கு ஏதுவாயுள்ள ஒழுக்கப்பகுதிகளைக் கை விடும் இவர்களின் செயல், செய்ந்நன்றி கோறலேயாகும்.

உலகியல் ஒழுக்கமும் வேதநூல் ஒழுக்கமும் 'பாலர் உன்மத்தர் பசாசரில் எனவும், உறங்கினோன் கை வெறும் பாக்கெனவும்' தாமே நம்மையறியாமல் நீங்குதல் வேண்டுமேயன்றி, நாமாக அவைகளை நீக்குதல் மீளா நிரயத்திற்கே ஏதுவாகும். உயர்ந்த ஒழுக்கங்களால் தோன்றுதற்குரிய பிரமஞானம் உண்டாகாமல் ஒருவன் 'நான் முத்தன்' என்று சொல்லிக் கொள்ளுதல் பித்தமே யாம். ஒருவன் இறவாத போழ்தே பிரமஞானம் உண் டாக வேண்டுமே யன்றி, இறந்த பின்பு பிரமஞானம் பெறுதல் இல்லை. ஏனெனில், இவ்வுடலைச் சடம் என்று நீயே முன்னர்க் கூறினாய்? "வையினும் வாழ்த்தினும் கொய்யினும் கொளுத்தினும், வணங்கினும் உதைப்பினும் பிணங்குதல் செய்யா"ப் பிரமத்தன்மையை நீ எப்போது பெறப் போகின்றாய்?

மனிதனுக்கு வயது நூறல்லதில்லை. இதன்கண் பாதி உறக்கத்தில் கழியும். மற்றைப் பாதியில் ஒரு பதினைந்து இளமையிலும், மற்றொரு பதினைந்து முதுமையிலும் கழி யும். எஞ்சி நின்ற இருபது பலவகையில் வீணாகிப்போம். இதனிடைப்பட்ட குறுகிய காலத்தில் எண்ணிறந்த நூல் களையெல்லாம் கற்று, கண்டார் நின்றாரோ டெல்லாம் தருக்கம் பேசித் தலைபறியுற்று, பல்லோர் ஈந்த உணவை யுண்டு, அவர்களுக்கெல்லாம் பிரமஞானம் சொல்லுகின் றேன் என்று பலவற்றை உளறிக்கொண்டிருக்கின்றாய்? இறப்பு நேருங்கால் 'அஞ்சற்க' எனக் கூறி உன்னைக் காக்கவல்ல இறைத் தொடர்பு ஏதும் நினக்கு இல்லையா யொழிகின்றது. 'நானே நான்முகன் திருமால் உருத்திரன் முதலிய எவருமானேன்' என்று நீ கூறித் திரிதலால், அவர் களெல்லாம் நின்பால் மிகவும் சினந்து நின்னை நிரயத்தில் வீழ்த்தி ஒறுப்பர். ஆதலின், மாயாவாதப் பேயா! நினக் குத் தேவ இனத்துள் ஒருவரேனும் எஞ்சியிருக்கும் வரை யில் நிரயத்தினின்று மீட்சியில்லை.

(தொடரும்)

CONNEMARA PUBLIC LIBRARY
18 JUL 1955
MADRAS

விரிவுரைப்பகுதி

மெய்யன்பு

வித்துவான். தி. மு. சங்கரலிங்கம்

மனித வாழ்க்கை புனிதமாக இருக்கவேண்டுமானல் அன்பு வேண்டும். இல்லாவிடில் அவ்வாழ்க்கை யானது கல்லார்கட் பட்ட திருவென அழிந்து பயனற்றுப்போம். அத்தகைய மேலான அன்பு நெறியானது மெய்யன்பு, பொய்யன்பு என இரு பகுதிப்படும். இதற்கிலக்கியம் திருக்குறள் கொண்டு பார்ப்போம். அன்பின் அடிப்படையிலே எழுவது நண்பும், இனிமையும் ஆதலால் மிகத் தொடர்புண்டு, பூவும் மணமும் போல்.

கண்ட இடத்திலே கண்ணுக்கினியனுகக் காட்சி அளித்து, பேச்சிலே காதுக்கினியனுக இருந்து, காணுத இடத்திலே "சீரிடம் காணின்எறிதற்குப் பட்டடை" போல நேரா நிரந்தவராகக் காணப்படுவாரது பொய்யன்பை,

> "முகநக நட்பது நட்பன்று ; நெஞ்சத்(து)
> அகநக நட்பதே நட்பு"

என்ற குறட்பாவில் கூறுவதாகவும், மெய்யன்பைப் பற்றித் தனது உயிர் போன்ற நண்பன் தீய நெறியிலே செல்லுகிறுன் என்ருல் நண்பனுனவன் உடன் அவனைத் திருத்தி உய்யும் நன்னெறியிலே செல்ல இடித்துரைக்க வேண்டும். இதுவே மெய்யன்பாகும் என்பதை

> "நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு"

என்ற குறட்பாவில் கூறுவதாகவும் கொள்ளலாம். இனி அன்பு எத்துணைப்பெயர் மாற்றம் பெறுகிறது பாருங்கள் :-

ஒப்பற்ற இறைவன் தன்னை அன்பால் வழிபடுவாரது உள்ளக் கமலத்தின்கண் அவர் நினைந்த வடிவோடு விரைந்து சென்று சிவனெனவும், திருமால் எனவும், இவை போன்று அந்தந்தச் சமயங்கட் கேற்ற பெயருடைய கடவுளாகவிளங்குகிறுன். அதுபோலவே 'அன்பு' என்ற

மெய்ப்பாடான பண்பும், ஒருவன் இறைவனிடம் செலுத்தும்போது பத்தி எனவும், மனைவியிடத்திலே காதல் எனவும், நண்பரிடத்திலே நட்பு எனவும், மக்களிடத்திலே பாசம் எனவும், இறைவன் உயிர்களிடத்தே செலுத்தும் போது கருணை எனவும், இம்முறையில் செலுத்துவோர் செலுத்தப்படும் முறையிலே பல பெயர்களைப் பெறுகிறது.

பொதுவான முறையில் சொல்லுவோமானால் உயிர்கட்கு இடையூறு செய்யாத நிலையில் ஒழுகுவதையே அன்பு எனலாம். இவ்வன்பானது தலையன்பு, இடையன்பு, கடையன்பு என்று மூன்று பாகுபாடு பெறுகிறது.

> "அறவோர்க் களித்தலும், அந்தண ரோம்பலும்,
> துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
> விருந்தெதிர் கோடலுக்கும் அன்பு மிகமிக வேண்டுவ"

தாகும். அன்பு என்ற சொல்லுக்குப் புலவர் பெருமக்கள் பலரும் பல பொருள் தருகின்றார்கள். எடுத்துக் காட்டாகப் பேராசிரியர், "அன்பென்பது அருட்குண முதலாகி மனத்திற்றோன்றும் நேயம். அஃதுடையார்க்குப் பிறர்கண் துன்பம் கண்டுழி கண்ணீர் விழுமாகலான் அவ்வருளானே அன்புடைமை விளங்கும்" என்று தொல்காப்பிய மரபியல் உரையில் கூறுகின்றார்.

நெய்தற்கலி ஆசிரியர் நல்லந்துவனார் "அன்பெனப்படுவது தன்கிளை செறாமை" என்று கலித்தொகையில் கூறுகிறார்.

பரிமேலழகர் அன்பு, அருள் இவைகட்கு வேற்றுமை கூறும்போது, அன்பு தொடர்புடையார் மாட்டுச் செல்வது; அருள் தொடர்பற்றார் மாட்டும் செல்வது என்று திருக்குறள் உரையில் கூறுகிறார். ஒத்த மெய்யன்புடையார் இருவர் தம்முள் ஒருவர் துன்பம் அடைந்தபோது கண்ட மற்றவர் உளம் நெகிழ்ந்து கண்ணீர் விடுவர் என்பதை

> "அன்பிற்கு முண்டோ? அடைக்குந்தாழ் ஆர்வலர்
> புன்கணீர் பூசல் தரும்"

என்று வள்ளுவர் கூறுகிறார். சிபியின் வரலாற்றைப் பாருங்கள்.

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு "

என்ற குறட்கருத்தினைக் கூறுகிறதல்லவா? இதுபற்றி யல்லவா அவரை,

" தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்கோன் "

என்று இலக்கியங்கள் புகழ்கின்றன.

விருந்தினரை உபசரிக்க அன்பு வேண்டும். உள்ளத்தில் அன்பின்றேல் முகத்தில்—வாக்கில் இனிமை ஏற்படாது. விருந்தினர் முகந்தால் வாடும் அனிச்சப் பூவினும் மெல்லியர். ஆகையால் முகத்தில் மாறுபாடு தோன்றப் பார்த்தால் வந்தார் போய்விடுவர் என்பதை மோப்பக் குழையும்......தமிழ் மறை கூறுகிறது. இக்குறட்கு விரிவுரையாற்றும் நுண்மாண் நுழைபுலம் உடையர், " சேய்மைக் கண் கண்டுழி இன்முகமும், அதுபற்றி நண்ணிய வழி நன்குரைத்தலும் என விருந்தோம்புவார்க்கு இன்றியமையாத மூன்றனுள் முதலாய இன்முகம் இல்வழிச் சேய்மைக் கண்ணே வாடி நீங்குதலின் தீண்டிய வழியல்லது வாடாத அனிச்சப் பூவினும் விருந்தினர் மெல்லியர் " என்று சிறப்பிக்கின்றார். இன்முகத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள விருந்தினர் உவப்புக்குக் காரணம் மெய்யன்பன்றோ? அன்பின்றேல் இனிமையேது? உள்ளத்திலே செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருத்தல் அன்றோ மெய்யன்பின் கருத்தாகும். இனிமை யமையாவிடத்துக் காணப்படுவது அன்பாக இருப்பினும் பொய்யன்பாக அன்றோ இருக்கும்?

அறத்திற்குத்தான் அன்பு தேவை என்பாரை மறுத்து மறத்திற்கும் அன்பு தேவை என்று அன்பினைப் போற்றுகிறார் திருவள்ளுவர். பல மக்கட்கும் தலைவனாக இருப்பினும் அவனிடத்தில் அன்பின்றேல் அவன் தலைவனாக இருத்தல் முடியாது, பகைவர்களால் சில நாளில் அடக்கப்பட்டு விடுவர்.

அன்பிலா வாழ்வு வறண்ட பாலைவனம் போன்றதாகும். அறவாழ்வு நடத்த – இன்ப வாழ்வு நடத்த அன்பு வேண்டும். இதனை

"அன்பும் அறனும் உடைத்தாயி னில்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது"

என்ற குறளுக்கு உரை

எழுதும் பரிமேலழகர் "இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சொன்றுகா வழி இல்லறம் கடை போகாமையின் அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று" என்று நயம்படக் கூறுகிறார். அன்பு பொருந்திய ஓர் உடலே பயன் பொருந்தியதாகும். அஃதின்றேல் அவ்வுடல் எலும்பு தோல் இவைகளாற் போர்த்தப்பட்ட ஓர் உருவம் எனப்படும்.

கோப்பெருஞ் சோழன் என்பவன் கைம்மாறு கருதாது வழங்கும் வள்ளல். அவன் புகழை அறிந்த பிசிராந்தையார் என்ற புலவர் அவனிடத்தே மெய்யன்பு கொண்டார். எப்பொழுது பார்த்தாலும் என் தலைவன் 'பேதைச் சோழன்' என்று கூறுவர். இதனை அறிந்த மன்னனும் புலவரிடம் மெய்யன்பு கொண்டு வாழ்ந்தான். காலங் கடக்கிறது. சோழன் வடக்கிருக்கச் செல்கிறான். அப்பொழுது உடனுறையும் பிறபுலவர்களிடம் என் நண்பர் பிசிராந்தையார் என்ற புலவர் என்னிடம் வைத்த மெய்யன்பால் இவ்விடம் வருவார்; அவருக்கும் வடக்கிருக்க இடம் ஒதுக்குங்கள் என்றான். புலவர்கள் பலரும் நின்னை அறியா அவர் வரமாட்டார் என்று மறுத்தனர். இன்புற்ற காலத்து வாராராயினும் இக்காலத்து வாராதிரார் என்று கூறி வடக்கிருந்தான். மன்னனிடம் புலவர் கொண்ட மெய்யன்பின் உணர்ச்சி அவரை இழுத்து வந்தது. அரசனுடன் இருந்து புலவரும் உயிர் துறந்தார். கண்ட பல நுண்மாண் நுழைபுலம் உடைய புலவர்கள் வியப்பும் கவலையும் கொண்டு இருவருடைய மெய்யன்பைப் போற்றிப் புகழ்ந்தனர்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்ற குறளுக்கு இவர் வாழ்வு எடுத்துக் காட்டாக உள்ளது.

இனி, வரலாற்ருேடு கூடிய இலக்கியம் எனப்படும் பெரிய புராணத்திலே மெய்யன்பர் வரலாறு மிகுந்து காணப்படுகிறது. அவ்விலக்கிய நூலிலே குன்றின் மேலிட்ட விளக்கெனச் சிறந்து காணப்படுவது சமய குரவர் வரலாறு தானே. திருநாவுக்கரசர் சைவத்திறத்திலே மேம்பட்டிருத்தல் போலவே வயதிலும் மூத்து இருந்தார். அவர்காலத்திலிருந்த திருஞான சம்பந்தர் சிறிய வயதிலே வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலிய இறைவனுல் ஞானப்பால் அருளி ஆளப்பட்டுச் சைவமும் தமிழும் தரணியிற் செழிக்க வளர்கின்றது. இதை யறிந்து அவரிடத்திலே மெய்யன்பு வைத்த நாவுக்கரசர் காண விழைந்தார். இறையருளால் சமயம் வாய்க்கிறது. காணுகிருர்கள். இதனைச் சேழக்கிழார் தன் காவியத்திலே ஓவிய மாக்குவதைப் பாருங்கள் :

"சிந்தை யிடையரு அன்பும் திருமேனி தனிலசைவும்
கந்தைமிகை யாங்கருத்தும் கையுழவா ரப்படையும்
வந்திழிகண் ணீர்மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத் தரசும்எதிர் வந்தணைய"

" கண்டகவு ணியக்கன்றும் கருத்திற் பரவும் மெய்க்காதல்
தொண்டர் திருவேடம் ... ... "

இந்த இடத்திலே நாவுக்கரசர்பால் சம்பந்தர் கொண்ட சிந்தையிடையரு அன்பு மெய்யன்பாகும் என்பதைச் சேக்கிழார் மெய்க்காதல் என்று சிறப்பிக்கிருர். மெய்க்காதல் - மெய்யன்பு).

சுந்தரர் வரலாற்றைப் பார்த்தால் அவர் இறைவனிடம் வைத்த மெய்யன்பும், இறைவன் சுந்தரரிடம் வைத்த மெய்யன்பும் கருணையும் என்னெனக் கூறுவது ?

ஆன்மாவின் தலைவனுன இறைவனைப் பரவையாரிடம் தூது சென்று வரவும், சங்கிலியாரை மணமுடிக்கச் சுந்தரர் அனுப்பியதும், அவர் மறுக்காது சென்றதும், தன்னைத் தோழனுக வைத்ததும் மெய்யன்பு அன்றிப் பொய்யன்பு என்று புகல்வாருண்டோ ? இம்மெய்யன்பை வெறுத்த

ஏயர்கோனை ஆட்கொண்ட திறம் சுந்தரர் பால்கொண்ட இறைவன் அன்பை விளக்கும். மெய்யன்பு மிகுந்த விடத்தில் ஏற்படும் அழுகையாலன்றோ மணிவாசகருக்கு அழுது அடி அடைந்த அன்பர் என்ற பெயர் உண்டாயிற்று. அவர் இறைவனருட் செயலை நினைத்தொறும், காண்டொறும், பேசுந்தொறும் அனைத்தெலும்புள் நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையவராக விளங்கியதால் அவர் பாடல்களில் மெய்யன்பு மிகுந்து காணப்படுகிறது. இதனாலன்றோ "வான்கலந்த மாணிக்க வாசக! நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே தேன் கலந்து பால் கலந்து தெவிட்டாத தீஞ்சுவை கலந்து ஊன்கலந்து உயிர் கலந்து ஒன்றுயினிப்பதுவே" என்று வடலூர் வள்ளலார் வழுத்தலுற்றார். ஆன்றோர் பாடலை மெய்யன்பு கொண்டு படித்தால் நாம் பல குற்றம் செய்யினும் குணம் எனக்கொண்டு நல்லருள் புரிவான் என்று நம்முன்னோர்கள் கூறியுள்ளனர்.

அப்பூதி யடிகள் என்பார் சிவனடி மறவாச்சிந்தையர்; நாவுக்கரசர் மேல் நவிலொணாப் பக்தி உடையவர். அவரது தேனினும் இனிய புகழறிந்த அவர் நாவுக்கரசரை நேரிற் கண்டிலர் எனினும் அவர்மீது அளவிலா மெய்யன்பு கொண்டிருந்தார். ஆராக் காதலைச் சேக்கிழார்,

> ஆண்ட அரசின் பாதம் அடைந்தவர் அறியா முன்னே
> காண்டரு காதல் கூரக் கலந்தஅன் பினராய் உள்ளார்.

என்று கூறுகிறார். மெய்யன்பு மிகுந்தாரிடத்துக் காணப்படுஞ் செயல் பல்லாற்றானும் சிறந்திடும் அல்லவா? அந்நிலையில் அப்பூதியடிகள் வீட்டிலுள்ள எல்லாப் பொருள்கட்கும் நாவுக்கரசின் நற்பெயரிட்டார். இதனைப் பெரிய புராணம்,

> ... ... மனைப்பா லுள்ள
> அளவைகள் நிறைகோல் மக்கள் ஆவொடு மேதி மற்றும்
> உளவெலாம் அரசின் நாமம் சாற்றும் ... ...

என்று கூறுகிறது. இவ்வாறு அவர்மீது மெய்யன்பு கொண்ட அவர் தண்ணீர்ப் பந்தலுக்கும் "திருநாவுக்கரசர்

தண்ணீர்ப் பந்தல்" என்று பெயரிட்டார். அவ்வழியே தாண்டக வேந்தரான நாவுக்கரசர் செல்லுகையில் தண்ணீர்ப்பந்தலிற்றன் பெயர் பொறித்துள்ளதைக் கண்டு வியப்புற்றார். அயலிலுளாரைக் கேட்டும் விபரம் முற்றும் விளங்கிலராய் உரிமையாளரான அப்பூதியடிகளிடமே சென்று இத்தண்ணீர்ப் பந்தலுக்கு "நும் பெயர் எழுதாது வேறொரு பெயரை எழுதியதின் காரணம் என்ன" என்றார். அப்பூதியடிகள் சினத்தை வீழ்த்திய செம்மல்தான். பொறுமை மிக்குடையவர்தான். எனினும் இம்மொழி அவரதுள்ளத்தைத் தாக்கியதால் மனங் கலங்கினவராய், "இறையருளால் கடலிலிருந்து வெளியேறி வந்து சைவ சமயத்தை வளர்த்துவரும் நாவுக்கரசின் பெயரினையா வேறொருபேர் என்றனை! சிவனடியார் கோலங்கொண்ட நீவிர் அவர் புகழை அறிந்திலாததேனோ? என்னே நும் சிவனடியார் பண்பு!" என்று அவர் மேல் கொண்ட மெய்யன்பால் உள்ளங் கவர்ந்து எழுந்து ஓங்கு சினமுடன் கூறுவதைக் காணுங்கள்.

> "... ... ...
> நன்றருளிச் செய்திலீர் நாணிலமண் பதகருடன்
> ஒன்றியமன் னவன் சூட்சி திருத்தொண்டின் உறைப்பாலே
> வென்றவர்தம் திருப்பேரோ வேறொரு பேர்..." (1809)

அன்பு முதிர்ந்த காலத்தில் மெய்யன்புடையாரது தீய செயலும் இன்பந்தருவனவாக உள்ளது. ஆக இன்பந் தருவதற்கு அடிப்படையாயது அன்பன்றி வேறில்லையாமாறு காண்க. இதனையே,

> வாரம் பட்டுழித் தீயவும் நல்லவாந்
> தீரக் காய்ந்துழி நல்லவும் தீயவாம்

என்று சிந்தாமணியில் திருத்தக்கதேவரும் தெளிவுபடக் கூறினர்.

தலைவன், தலைவியர் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறிந்து வாழும் நல்வாழ்க்கைக்கு மிகவும் வேண்டப்படுவது மெய்யன்பு. இவ்வாழ்வு சிறப்பாயிருத்தற்குத்

தலைமக்கள் இருவரும் ஒன்றுபடு கொள்கையோடு ஓராங்கு முயங்கியும், புலந்து ஊடியும் வாழ்வர். இதனால் அவர்கள் கொண்ட மெய்யன்பு புலப்படுதலுமுண்டு. ஊடலுக்கும், அதன்பின் கூடலுக்கும் அன்பு தேவைப் படுகிறது. இதனை,

புலத்தலிற் புத்தேணா டுண்டோ ? நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து

என்ற குறளில் வள்ளுவர் புலத்தலைப் போற்றுகிறார்.

தலைவன் ஒருவன் முன்பின் அறியாத தலைவி ஒருத்தியைக் கண்டான். எதற்கும் வயப்படாத இவன் உள்ளம் இவளைக் கண்டதும் நெகிழ்கிறது. உள்ளம் மேகங் கண்ட தோகை போல் மகிழ்கிறது. இவர்களது உள்ளம் ஒன்றுபட்டதுபோலவே உடலும் ஒன்றுபட்டது. தலைவன் கூடியபின் பிரிவான் என்றறிந்த தலைவி அஞ்சினாள்; காதலாற் கசிந்தாள்; கண்ணீர் மல்கியது. அறிந்தான் தலைவன். நெடுங்காலம் பழகினாரிடையும் அன்பு உண்டாதல் அரிதாய இவ்வுலகத்தில் முன்பின் பழக்கமில்லாத தம் இருவருடைய உள்ளங்களும் ஒன்றுபட நிலத்தினும் வானத்தினும் உயர்ந்ததாகவும், நீரினும் ஆழமாகவும் இருக்கின்ற மெய்யன்பை (காதல்) எண்ணி வியந்தான்.

உன் தாயும், என் தாயும் என்ன உறவினர் ? ஒருறவும் உடையரல்லரே! என்னுடைய தந்தையும், உன்னுடைய தந்தையும் எம்முறையில் உறவுடையவர் ? அவர்களும் கேண்மையில்லையே! யானும், நீயும் எப்படி அறிவோம் ? இதுகாறும் அறிந்தோ மில்லையே! இங்ஙனமிருக்க, செம்மையான முல்லை நிலத்திற் பெய்த மழை நீர், நிலத்திற்படுமுன் நன்றாக இருப்பினும், பட்டவுடன் அந் நிலத்தின் பண்பை யடைதல் போல யாமும், நம்முடைய மெய்யன்பும் உள்ளமும் ஒன்றுபட்டுக் கலந்தனவே! என்ன வியப்பு! என்று தலைவன், தலைவி வருந்தியபோது கூறுகிறான். ஏன் ? இவ்வளவு நயந்தோன்றவும், மெய்யன்பு புலப்படவும் "செம்புலப் பெயல் நீரார்" என்ற புலவர் 'குறுந்தொகை' என்ற நூலிற் கூறும் பாடலைப் பாருங்கள்!

யாயும் யாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எம்முறை யறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே ! (40)

இவ்வாறு பல்லோரானும் பலவிதமாகப் பாராட்டப் படும் ' மெய்யன்பு ' எல்லோரிடத்தும் அமைதல் வேண் டும். அப்பொழுதுதான் பெறுதற்கரிய மானிடப் பிறவி யும் சொலற்கரிய பேரின்பமடையும். எங்கும் நிறைந்த இறைவனை—" அன்பெனும் பிடியுள் அகப்படும் மலை " என்று அறிஞர் கூறுவதுபோல மெய் அன்புகொண்டு அவனருள் எய்தி நலமும், இன்பமும் கொண்டு வாழ்வோ மாக.

திருக்கழுக்குன்றத் திருமுறை இன்னிசைப் பெரு விழா நிகழ்ச்சிகள்

(ந. ரா. ஆடலரசு)

வழக்கம்போல் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத் தின் சார்பில் திருக்கழுக்குன்றத்தில் திருமுறைப் பெரு விழா ஆளுடைய அடிகள் திருநாளாகிய ஆனி மகத்தை ஒட்டி 10-7-53 முதல் 14-7-53 வரை இயலிசை விழாவாகச் சிறப்புற நடைபெற்றது.

திருமுறைகள் கண்டெடுக்கப்பட்ட இடம் திருச்சிற் றம்பலம் என்னும் வரலாற்று முறையை ஒட்டி, இவ் வாண்டு விழாவுக்கு " வடதிருச்சிற்றம்பலம் " என அருண கிரியார் தமது திருப்புகழிற் சிறப்பிக்கும் மாம்பாக்கம் குருகுலத்திலிருந்து (மதுராந்தகத்தை அடுத்துள்ளது) திருமுறைகள் யானைமேல் ஏற்றப் பெற்றுப் பிள்ளையார் மாணிக்கவாசகர் திருவுருவங்களுடன் திருக்கழுக்குன்றத்

துக்கு (18 கல் தொலைவு) இடையிலுள்ள ஊர்களில் திருவுலாச் செய்விக்கப் பெற்று எடுத்து வரப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட சென்னை அன்பர்களும், பிறரும் உடன் அன்புடன் நடந்து வந்தது குறிப்பிடத்தக்கது. திருமுறைப் பொருளாக உள்ள மதுராந்தகம் கடப்பேரித் திருவெண்காட்டீச்சுரர் 10-7-53 வெள்ளியன்று காலை குருகுலத்திற்கு எழுந்தருளினர். சிறந்த மண்டகப்படி முறையில் திருமுழுக்கு வழிபாடு முதலியன கொண்டு மாலையில் விடையூர்தியில் நல் விழாக் காட்சியளித்தனர். திருமுறைகளோடு மீட்டும் மதுராந்தகம் வரையில் திருவெண்காட்டீச்சுரர் எழுந்தருளி வழிவிட்டருள, யானை அப்பெருமானைத் திருமுறைகளுடன் மும்முறை வலம் வந்து விடை பெற்றுக் கொண்டது. இச்சிறப்பும், வழி நெடுக மதுராந்தகத்திலும், கருங்குழியிலும், வல்லிபுரத்திலும், வழுவத்தூரிலும், திருக்கழுக்குன்றத்திலும் ஆங்காங்குள்ள பெருமக்கள் திருமுறைகளையும் உடன் வந்த உடையவர்களையும், அடியார்களையும் வரவேற்று மண்டகப்படி வழிபாடுகளும் சிற்றுண்டியும், உணவும், சுவை நீரும் செய்து மகிழ்வித்த மேன்மையும் மறக்கற்பாலன அல்ல. ஏற்பாட்டின்படி, திருமுறைப் புறப்பாட்டைச் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை பி. ஏ., எல். டி., அவர்கள் வந்திருந்து சிறப்பித்துக் காலங்கடந்த நேரத்திலும் கருங்குழி வரை உடன் வந்து சொற்பொழிவாற்றி, நூற்றுக்கணக்கான சிற்றூர் மக்களை மகிழ்வித்தார்கள்.

திருக்கழுக்குன்றத்தை அடைந்ததும், 11-7-53 சனியன்று மாலையில் அவ்வூர் மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தார் வரவேற்பு ஏற்பாடுகளைச் சிறக்கச் செய்து மேள தாளங்களுடன் குடை கொடிகளுடன் எதிர்கொண்டு வந்து ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழியில் திருக் காமு நாயகர் அவர்கள் அன்பர்களுக்கு நடந்து வந்த களைப்புத்தீரச் சூடான சுவை நீர் கொடுத்து மகிழ்வித்தார். ஷெ கழகத்தார் சார்பிலும், செங்கற்பட்டு அருள்நெறியன்பர் சார்பிலும் அடிவாரத்தில் வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பட்டன. மாலைகள் அணிவிக்கப் பெற்றன. பின்பு தாழக் கோயிலில் வழிபாடு செய்து திரிபுரசுந்தரியின் திருக்கோலக் காட்சி கண்டு மக்கள் மகிழ்ந்தனர்.

மாம்பாக்கத்திலிருந்து வந்தவர்கள் எல்லாருக்கும் ஷெ மெய்கண்டார் திருத்தொண்டர் கழகத்தொண்டர் திரு. சுப்பிரமணியனுர் அவர்கள் இல்லத்தில் சிற்றுண்டி வழங்கப் பட்டது.

மறுநாள் 12-7-53 ஞாயிறன்றுகாலை சென்னையிலிருந்தும் சுற்றுப்புற ஊர்களிலிருந்தும் ஆயிரமாயிரம் அன்பர்கள் திருக்கழுக்குன்றத்தில் ஈண்டினர். திருப்புகழ்மணி அவர்கள் தமக்கே உரிய தனி முறையில் திருப்படி விழாவாகப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட இசை முழக்கத்தோடு திருவருள் உணர்ச்சியை எழுப்பும் இனிய பாடல்களையும், தொடர்களையும், விளக்கஉரைகளையும் வழங்கி வர எல்லோரும் மலை இவர்ந்தனர். ஆசிரியரவர்களோடு உச்சிச் செல்வனை வழிபட்டு, கழுகுக் காட்சி கண்டு திரும்பினர்.

பிற்பகல் 5 மணிக்கு மீண்டும் ஆசிரியரவர்களோடு மலைவலமாகச் சொக்கம்மை மலைச்சாரலை அடைந்தனர். ஆசிரியரவர்களின் அரிய உரைகளைக் கேட்டுத் திருவருளில் திளைத்தனர். இரவு 9-மணிக்குமேல் அடிவாரத்தில் நாகர் கோயிர் 'தொண்டன்' இதழாசிரியர் திரு. கே. ஆறுமுக நாவலர் அவர்களின் "பதிபசுபாச விளக்கம்" என்னும் அரிய பெரிய சொற்பொழிவினைக் கேட்டு மகிழ்ந்தனர்.

13-7-53 திங்களன்று காலை 10-மணிக்கு அடிவாரத்தில் மதுரைத் திருஞானசம்பந்தர் திருமடத்தின் இளவரசாக அமர்ந்துள்ள திருவருள் தவயோக சிவத்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகளின் தலைமையில் திருமுறைப் பேரவை தொடங்கியது. அண்ணாமலைநகர் திருமதி இராசேச்சுவரி சுவாமிநாதன் அவர்களும் நாவலர் ஆறுமுகம் பிள்ளை அவர்களும் முறையே 'திருவாசகம்' 'திருவாசகமும் மணிவாசகரும்' என்னும் தலைப்புகளில் இன்பம் மீதூரச் சொற்பொழிவாற்றினர். பிற்பகல் 5 மணிக்கு மீண்டும் கூட்டம் தொடங்கியது. முதலில், இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், சென்னைக் கலாக்ஷேத்திரத் தலைவருமாகிய திருமதி. உருக்குமணி அருண்டேல் அவர்கள் சிற்றுயிர்க் கொலையின் சின்னபின்னங்களைத் தடுக்கும் சட்டமொன்றைத் தாம் கொண்டுவர இருப்பது பற்றி

விளக்கிப்பேசி அதற்கு அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக் கான மக்களின் ஆதரவைப் பெற்றார்கள். அடுத்து அண்ணாமலை நகர் - திரு. பு. ர. சுவாமிநாதன், எம். ஏ., எல். டி., அவர்களும், திருமுருக. கிருபாநந்த வாரியார் அவர்களும் முறையே 'மூவர் வகுத்த வழி', 'ஒருவாச கம்' என்னும் தலைப்புகளில் மகிழ்வுமிக்க சொற்பொழி வாற்றினார்கள்.

மொத்தத்தில் திருமுறைப் பேரவைக்கு—ஏன்? திரு முறை விழாவுக்கே தலைமை தாங்கிய அடிகளாரின் தோற் றப் பொலிவோடு கூடிய பல பெருந்தகைமையினாலும், அவர்களின் இரு சிறகுகளைப் போல இருந்து நாடெங்கும் சுற்றி அரும்பெரும் சமயப் பணியினைப் 'பிரசார' முறை யில் செய்து வரும் நாவலர், வாரியார் இவர்களின் இணைப்பி னாலும், செந்தமிழ்ச் சிவநெறித் தம்பதிகள் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கோர் எடுத்துக் காட்டாக இலகும் திரு. சுவாமிநாதன் தம்பதிகளின் வரவாலும் திருமுறை விழா பெருஞ் சிறப்புற்றது.

14-7-53 செவ்வாய்க்கிழமை, ஆனிமகத் திருநாள்: காலையில் பிள்ளையார் வழிபாட்டுக்குப் பின் திருமுறைகள் ஒப்பனை செய்யப்பெற்ற அம்பாரியில் யானை மேல் ஏற்றப் பட்டுப் பிள்ளையார் மாணிக்கவாசகர் நால்வர் திருவுருவங்க ளுடன் தாழக் கோயிலிலிருந்து புறப்பட்டன. அணியணி யாகப் பலவூர்த் தேவார சபையினரும் ஆடவரும் மாதரும் திருவருட் பாடல்களைப் பேரன்புடன் ஓதிக் கொண்டு தொடர்ந்தனர். திருக்கழுக்குன்றத் தாழ்வரை அருளிசைச் சூழலாயிற்று.

சஞ்சீவிமலைச் சாரலில் உள்ள திருவடிக் கோயிலை அடைந்ததும், அங்கே திருவடி வழிபாடு நடைபெற்றது. குருகுலச் சார்பில் மயிலைத் திருவள்ளுவர் கோயில் அறங் காவலர் திரு. சங்கரலிங்கஞ் செட்டியார் 'போதுமறை விளக்கம்' என்னும் திருக்குறட்பாயிர விளக்க நூலை வெளியிட்டார். பிறகு ஏற்பாடு செய்திருந்தபடி திரு நெறித் தமிழிசைச்செல்வர் - திரு. த. நடராசன் திரு. ரா. பாலசுந்தரம் இவர்களும், திருநெறித் தமிழிசை வேந்தர்

புதுவை - ஆ. விநாயக முதலியார், காஞ்சி திரு. புண்ணிய கோடி இவர்களும் மக்கள் மிகவும் மன நிறைவு கொள்ளும் படித் திருமுறை இசையரங்குகள் நடத்தினர்.

கூடியிருந்த ஆயிரக்கணக்கான அடியார்களுக்கும் அங்கேயே பகல் உணவு, கதம்பச்சாம்பார் தயிர்ச் சாதங்களாக "வனபோசனம்" போல் சிவத்திரு. வள்ளியம்மையார் அவர்களால் வழங்கப்பட்டது. இந்த அரும்பெறல் வள்ளன்மையைக் கண்டு வியவாதார் போற்ருதார் ஒருவருமில்லை !

மீண்டும் சென்னை இசைவள்ளல் திரு. சி. சங்கரலிங்கம், திரு. அருணுசலம் இவர்களும், இசைச்சோதிமணி இரத்தினவேலர், அன்ஞர் மாணவர் இராயபுரம் இறைபணிக் கழக அன்பர்கள் இவர்களும், இசையரங்குகள் இனிதே நிகழ்த்தினர். இடையில் சிறிதுநேரம் திரு. வேதாசலம் செட்டியார் தலைமையில் சென்னை அருணகிரி நாதர் பக்தஜன சபையினரின் இசைப்பாட்டும் உருக்கமாக நடைபெற்றது.

மாலை 6 மணிக்கு நால்வர்கோயில் வழிபாடும், மாணிக்க வாசகர்க்கு ஊசலும், குருவே அன்பர் திரு. நாகேந்திரஞர், திரு. சிட்டிபாபு இவர்கள் குழுவினரின் ஊக்கமான இசையரங்கும் நடைபெற்றன.

இரவு, அடிவாரத்தில் இசையரசர் எம். எம். தண்டபாணி தேசிகரவர்கள் பல்லாயிரக் கணக்கான மிகப்பெருங் கூட்டத்தினிடையே வெண்ணிலவுபோல் அமர்ந்து இனிய உள்ளத்துடன் அரிய பெரிய தமிழிசையரங்கு நிகழ்த்தியுதவினர்.

இறுதியில் திருக்கூட்டச் செயலாளர் திரு. எம். ஆர். சம்பந்த நாயகரவர்கள் நன்றிகூற, ஆசிரியரவர்களும் இன்னுரைகூறி எல்லோரையும் வாழ்த்தியருள, விழா திருவருளுதவியால் இனிது நிறைவெய்தியது.

(முல்லைக்கொடியில் 24—7—53ல் வெளிவந்தது.)

——

திருமந்திரநகர் — பாகம்பிரியாள் மாதர் கழகத்தின்
வெள்ளி விழாவில்

திருமதி — பிருந்தாதேவி அம்மையார் நிகழ்த்திய

தலைமையுரையில் சிறந்த பகுதிகள்

சத்தி-சிவம்: உலகம் பரந்தது - விரிந்தது! இப் பரந்த விரிந்த வையகம் இருவித சக்திகளால் நடத்தப் படுகிறது! ஆராய்ச்சியாளர் முடிவும் இஃதே! "சிவமெனும் பொருளு மாதி சத்தியொடு சேரினெத்தொழிலும் வல்லதாம்" சௌந்தரிய லகரியில் நாம் காணும் காட்சியும் இதுதான்! சிவசத்தி இரண்டால்தான் உலகம் நடைபெறுகிறது என்பதற்கு நமது நூல்களிலே மேற்கோள்கள் பல உள்ளன!

"ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே—பாகத்(து)
அருள் வடிவுந்தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவை யாரறிவார் பேசு.

பாகத்து அருள் வடிவுந் தானுமாய் ஆளாவிடில் ஆகமங்களில்லை அறுசமயங்களில்லை; யோகங்களில்லை; உணர்வுகளில்லை; இவை யனைத்திற்கும் காரணம் சிவசத்தித் தொடர்பேயாம்!" அம்மையப்பரே உலகுக் கம்மையப்பர்" வையகம் வாழத் தாயாகவும், தந்தையாகவும் நின்றணிப்பது இந்த இருவித சக்திகளே! இவையிரண்டும் இணைந்து ஒன்றாகி நின்றருளுகின்றது!" ஒருவனோடொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகமெல்லாம், வருமுறை வந்து நின்று போவதும் ஆதலாலே" என்னும் சித்தியாரும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த வாரமுதே" என்னும் மணிவாசகமும் இறைவன், தாயாகித் தந்தையானவன் என்பதை விளக்குவனவன்றோ?" பெண்ணினைப் பாகங்கொண்ட பெருந்தகைப் பரமயோகி" யெனத் திருவிளையாடற் புராணம்

கூறுகிறது. இறைவன் உயிர்கட்குப் போகம் அருளுதற் பொருட்டு உமையை ஒரு கூற்றிற் கொண்டானாயினும், யோகம் புரிகின்ற தூய உடம்பும், இயல்பாகவே பாச மின்மையும், உடையன் என்பதைக் கருவூர்த் தேவர் திருவிசைப்பாவில், "மங்கையோடிருந்தே யோகு செய்வானை" யென்னும் அடியால் நாம் உணர முடிகிறது.

உலகெலாம் ஈன்ற இறைவி கன்னியாதலைச் சித்தியார் அறிவுறுத்துகிறது.

"சிவஞ்சத்தி தன்னையீன்றுஞ் சத்திதான் சிவத்தையீன்றும்
உவந்திரு வரும்புணர்ந்திங் குலகுயிரெல்லாம் ஈன்றும்
பவன் பிரமசாரியாகும் பான்மொழி கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் றெரியு மன்றே"

இவைகளினின்றும், இறைவன், "பாகம் பெண்ணோடாயின பரிசு" உலக உயிர்கட்குப் போதத்தை ஊட்டி வினையைத் தொலைத்து அருள்புரிதற் பொருட்டே என்பது செவ்வனே புலனாகின்றது.

அன்னையும் தந்தையும், மக்களின் மதிப்புக்கு வணக்கத்திற்கு உரித்தானவர்கள். அங்ஙனமே, உலகுயிர்கட்குத் தாயும்தந்தையுமான இறைவனை எண்ணி எண்ணி, உணர்ந்துணர்ந்து உள்ளமுருகி வாழ்த்துதல், வணங்குதல் கடமையாகும்.

மக்களும், காட்சியும் : மனிதன் மனிதனாக வாழுதல் மாண்பு. உலகப் பற்றில் பிணைப்புண்டு வாழும் மனிதன், இறையன்பைக் கொண்டு வாழின் நலம்பல எய்துதல் எளிதாகும். * * * *

இறைவனடி சேராதார் கற்றதனாலாய பயனென் கொல்? என்ற வினாவை நம் மனத்தகத்தே யெழுப்பி, வாலறிவ னற்றாள் தொழுபவர் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்ற உண்மைப் பெற்றியை நமக்குணர்த்துகின்றது.

மக்கள் அனைவரும் புகழை விரும்புகின்றனர். பதவியை விரும்புகின்றனர். பணத்தை விரும்புகின்றனர். அசத்துப்

பொருள்களிலே பற்றுக்கொண்டு நாட்கள், மாதங்கள், ஆண்டுகளைக் கடக்கின்றனர். நிலையாகாதனவற்றை நிலைத்தவையென எண்ணி, ஒன்றைமற்றொன்றாக மாறுபாடாகக் கருதிக் காலத்தை வீணே கழிக்கின்றனர்.

" தேடுந் திரவியமுஞ் சிற்றறிவும் பற்றுதலும்
கூடும்பொய் என்றருளிற் கூட்டினான்—நாடரிய
ஞானப்ர காசனுயர் நற்கமலைமாநகர்வாழ்
வானப் பிறையணிந்த மன் "

இவ்வுலகில் ஈட்டப்படும் செல்வமும் அதனைப் பொருளென்றறியும் புல்லறிவும், அவற்றின்கட் செய்யும் பற்றும் பொய்யெனவும், முதல்வன் திருவருளொன்றே மெய்யெனவும், மேற்கண்ட சிவபோக சார வெண்பா செப்புகின்றது. மறுபாடலிலே இதன் விரிவு புலப்படுகிறது.

" காண்பதும்பொய் கேட்பதும்பொய் காரியம்போலே மிதமாய்ப்
பூண்பதும்பொய் எவ்விடத்தும் போகமும்பொய்—மாண்பாகத்
தோன்றின்ப வெள்ளமாய்த் துன்னி என்னுட் சம்பந்தன்
வீற்றிருப்ப தொன்றுமே மெய் "

" இந்திரிய வாயிலாகக் காண்டல், கேட்டல், பூணல், தரித்தல் இவ்வின்ப நுகர்ச்சிகளெல்லாம் பொய்யாக, மாட்சியொடு இன்பவெள்ளப் பெருக்காய் என்னுள் புரையறச் சிறந்து திருஞான சம்பந்தன் வீற்றிருப்பது ஒன்றுதான் உண்மையாய் முடிந்தது. எல்லாம் பரமாய்த் தோன்ற, விகற்பங்களனைத்தும் பொய்யென மறைய, ஞானசம்பந்தமே நித்தியமாய் நின்றது" என்று கூறுகிறார்.

இந்திரிய வாயிலாகக்காண்டல், காட்சிக்குரிய பொருள் நம் எதிரே இருக்கும் வரைதான் காணுதல் இயலும். ஆயின் அருட்பார்வை என்றும் நிலைத்தது. எத்திசையும், எவ்வுலகும், எத்தொழிலும், எப்பயனும், மாறுபடக்கூடியவை. அவைகள் கனவில் கண்ணாடியில் தோன்றி மறை

யும் பொருள்களைப் போல்வன. ஆகவே பரத்தில் அன்பு செய்.

“ அருளா லெவையும் பாரென்றான் அத்தை
யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன்
இருளான பொருள்கண்ட தல்லாற் கண்ட
வென்னையுங் கண்டில னென்னேடி தோழி !”

யெனத் தாயுமான அடிகள் மெய்யுணர்ந்து கூறுகின்ற பொழுது இந்திரிய வாயிலாகக் காணும் காட்சி மறையக் கூடியது - இருளானது என்பதும்; அருளாற் காணக் கூடிய காட்சி என்றும் நிலைத்தது - நீங்காதது என்பதும் பெறப்படுகின்றன.

மனிதனுக்குத் தலைவைத்தது எதற்கு? “ இல்லை ” “ மாட்டேன் ” “ முடியாது ” என மும்மொழி கூறி அசைக்கவா? வாய் வைத்ததேன்? உயிர் உடலோடு ஒட்டி நிற்கும்வரை பொய்யுரைக்கவா? தோழர்கள் கூட்டம் எதற்கு? “ கண்டதே காட்சி, கொண்டதே கோலம் ” எனப் பிதற்றித் திரியவா? அல்லவே! மணிவாசகர் அணியாகக் கூறுகின்றாரே! “ வணங்கத் தலை வைத்து வார் கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத்தன் சீரடியார் கூட்டமும் வைத்து ” எல்லாம் அவன் வைத்தான். வேண்டிய யாவும் நல்கினான். நாம்தான் தக்கமுறையில் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நல்லன காணல், நல்லன கேட்டல், நல்லன செய்தல் நாளும் நலன் தருவன வன்றோ.

இறைத்தன்மை :

“ தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே ”

தீ வெம்மையானது; அதனைவிட வெப்பம் மிகுந்தவன்! புனல் குளிர்ந்தது; அதைவிடக் குளிர்ச்சி பொருந்தியவன்!

இவ்விருவகைப் பண்பும் பொருந்திய இறைவனது அருளை அறிவார் இல்லையே ; தீயோர்க்குத் தீயோன் ; நல்லோர்க்கு நல்லோன். * * * *

“ அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே
அன்பெனும் கரத்தமர் அமுதே

என இராமலிங்க அடிகள் அன்பிலே இறைவனைப் பிணைக்கிறார்.

பரம்பொருள் ஆன்ம போதத்தால் காணப்படுவதன்றென்பதனை பதி இலக்கண தரிசனம் கூறும் வாயிலாகச் சித்தியார் சித்தரிக்கின்றது.

“ அந்நிய மிலாமை யானும் அறிவினுள் நிற்றலானும்
உன்னிய வெல்லாம் உள்நின் றுணர்த்துவன் ஆதலானும்
என்னது யானென் றோதும் இருஞ்செருக் கறுத்தலானும்
தன்னறி வதனாற் காணும் தகைமையன் அல்லன் ஈசன் ”

* * * *

“ அறிவரியான் தனையறிய ஆக்கை ஆக்கி
அங்கங்கே உயிர்க்குயிராய் அறிவு கொடுத்தருளால்
செறிதலினால் திருவேடம் சிவனுருவே யாகும்.

என்றும்,

“ தாபர சங்கமங்க ளென்றிரண் டுருவினின்று
மாபரன் பூசைகொண்டு மன்னுயிர்க் கருளைவைப்பன் ”

என்றும் சித்தியாரில் போற்றப்பட்டவன் இறைவன். “ குறியொன்று மில்லாக் கூத்தன் ” “ குணங்கள் தாமில்லா இன்பமே ” என மணிவாசகரால் மகிழ்ந்து கூறப்பட்டவன் இறைவன். இறைவன் தன்மையை யெடுத்தியம்பப்புகின் நூற்றொரு கோடியின் மேற்பட விரியும்.

(தொடரும்

செய்தித்திரட்டு

16-7-53. திருவாசகவிழா : தூத்துக்குடி பாகம்பிரியாள் மாதர் கழகத்தில் வெகு விரிவாக நடைபெற்றது. திருவாசத்தில் ஒவ்வொரு பகுதியும் ஆடல், பாடல், உரையாடல் முதலியவகைகளில் சிறுமிகளும், பெரியவர்களும் கலந்துகொண்டார்கள்.

19-7-53. காஞ்சி கச்சபேசர் திருக்கோயில், மதுரை சம்பந்தர் ஆதீனம் சோமசுந்தர தேசிகர் தலைமையில் திருக்கூட்டம் நடைபெற்றது. சந்நிதானங்களுக்கு 19, 20-ம் தேதிகளில் வரவேற்பு முதலியன நடைபெற்றன.

26-7-53. காஞ்சி கச்சபேசர் ஆலயத்தில் மெய்கண்டார் கழகத்தின்கீழ் திரு. வச்சிரவேல் முதலியாரும், அருணை வடிவேல் முதலியாரும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

24, 25, 26-7-53 தேதிகளில் இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் 49-ம் ஆண்டுவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

லேடி வெலிங்டன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திருமதி ஆர். இராஜரத்தினம் அம்மையார் எம்.ஏ., எல்டி., அரசாங்கத் துணைக்காரியதரிசி இராவ்சாஹிப் நல். முருகேச முதலியார் பி. ஏ. அவர்கள், தர்மரட்சாமணி கே. பாலசுப்பிரமணிய ஐயர் பி.ஏ., பி.எல்., எம்.எல்.சி. ஆகிய பெருமக்கள் மூன்றுநாட்களும் முறையே தலைமை வகித்தனர்.

திருமதி இராஜம்மாள்-ஞானசம்பந்தம், BSc. B.T., கி.வா. ஜகந்நாதன், எம்.ஏ., சைவத் தமிழ்மணி எ. எஸ். ஞானசம்பந்தம், எம்.ஏ., சித்தாந்த சிகாமணி கே. வச்சிர வேலு முதலியார், பி.ஏ., எல்.டி., மயிலை பாலசுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்., பன்மொழிப் புலவர் டி. பி. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, எம்.ஏ., பி.ல்., எம்.ஓ.எல். ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

இசைவாணர் தேவாரம்-சங்கரலிங்கம் பிள்ளை, திருமுருக விசாகநம்பி, இயலிசைப் புலவர் - வித்துவான் புண்ணியகோடி முதலியார் ஆகியோர் தேவாரத் திருமுறைகளை இன்னிசையோடு ஓதினார்கள்.

மூன்றும் நாள் 1500 ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது.

சபைத்தலைவர் திருவாளர். ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் நன்றிகூற ஆண்டுவிழா இனிது நிறைவேறியது.

9—8—53ல் நடந்த சைவசித்தாந்த மகாசமாஜ உறுப்பினர் பொதுக்கூட்டத்திற் செய்த தீர்மானம்: "சித்தாந்தப் பேராசிரியர், சிவத்திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்களின் 81–வது ஆண்டுப் பிறப்பு நாளில், தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையினர் திருமந்திர நகரில் ஒரு சிறப்புக் கூட்டம் நடாத்தி, அவர்கட்கு வாழ்த்துரை வழங்க ஏற்பாடு செய்திருப்பதைச் சைவ சித்தாந்த மகா சமாஜம் பெரிதும் பாராட்டுகிறது. அந்நாட் கொண்டாட்டம் எல்லாச் சிறப்புடனும் இனிது நிறைவேறவும், அரை நூற்றாண்டிற்கு மேலாகவே சமயபாட வகுப்புகள் பல நடத்தியும், அரிய சித்தாந்த விரிவுரைகள் பலவாற்றியும், சைவசித்தாந்த ஞான வளர்ச்சிக்கு அருந்தொண்டாற்றி வந்துள்ள சித்தாந்த முதுபெரும் புலவரவர்கள், இன்னும் பல்லாண்டு தவவுடல் நலத்துடன் மன்னியிருந்து தம் ஞானத்தொண்டை நிகழ்த்திக்கொண்டு இனிது வாழவும், அருள் புரியுமாறு அம்பலத்தாடும் ஐயனைப் பிரார்த்திக்கின்றது."

கோவைத் தமிழ்ச் சங்கம்

28-6-53. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் திரு. பி. ஸ்ரீ. ஆச்சாரியார் அவர்கள் "தனிப் பெருங்கூத்து" என்னும் பொருள்பற்றி விரிவுரை ஆற்றினார்கள்.

12–7–53 தலைவர் வித்வான் கு. நடேச கவுண்டர். சொற்பொழிவாளர் திரு. ஜி.எம். வெங்கடேசன். பொருள்: வள்ளுவர் காட்டும் கடவுள் நெறி.

14–7–7–53. திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் மாணிக்கவாசகர் திருநக்ஷத்திரவிழா, புராணப் பிரசங்க வாயிலாக நடந்தது.

17–7–53. ஆர். எஸ். புரத்தில் வித்வான் ஏஸ். அருணசலம் பிள்ளை அவர்களால் நடத்தப்பெற்றுவந்த பெரியபுராணபடன நிறைவுவிழா உயர் திரு. சி. கே. எஸ். முதலியார் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது.